
# பன்னிரு திருமுறைத் திரட்டு



வேலணை கிழக்கு
திரு. திருமதி. பிள்ளையார் செல்லையா அவர்கள்
நினைவாக வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைத் திரட்டு



இறைவனடி எய்திய

**வேலணை கிழக்கு**

**திரு. பிள்ளையார் செல்லையா அவர்களின்**

**நினைவாக**


யுனைட்டெட் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்
529/19, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை, ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு. பிள்ளையார் செல்லையா



தோற்றம்.
1897

மறைவு.
04 - 10 - 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## P. P. Devaraj, M. P.

Minister of State for Hindu Religious and Cultural Affairs

தங்களுடைய தாயார் திருமதி. செல்லையா இராசம்மாவை நினைவு கூருமுகமாக தேவாரம் ஈருக பல தெய்வீகப் பாடல்களை ஒன்றிணைந்து வெளியிட்ட பெருமை எஸ். பி. சாமி சகோதரர்களுக்குண்டு.

இப்பொழுது தந்தையின் பெயரால் மேலும் பன்னிரு திருமுறை உட்பட மற்றும் பல்வேறு பாடல்களை சேர்த்து விரிவான முறையில் ஒரு நினைவாஞ்சலி மலரை எஸ். பி. சாமி சகோதரர்கள் வெளியிட்டு இலவசமாக வழங்கவிருப்பது பாராட்டப் பட வேண்டியகாரியமாகும்.

இந்து சமயத்தில் புதிய ஆர்வமும், புத்துணர்ச்சியும் தோன்றியிருக்கும் இவ்வேளை-யில் இத்தகைய சிறந்த நூல் பலருக்குக் கிடைக்கும் வாய்ப்பு மிகவும் மகிழ்ச்சி-யைத் தருகின்றது.

இந்த சேவைகளின் மூலம் அன்னை பிதாவுக்கு சிறப்பானதொரு கைங்கரியத்தைச் செய்து அவர்கள் நாமம் என்றும் தழைத்திருக்க வழி செய்துள்ளார்கள் எஸ். பி. சாமி சகோதரர்கள்.

வாழ்கஅவர் தம் சமயப்பணிகள்.

பி. பி. தேவராஜ்

இந்து சமய கலாசார

தமிழ் அலுவல்கள்

இராஜாங்க அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுதோறும் தமிழ் மாலை சூட்டி அலங்கரிப்போம்!

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனுஞ் சொல்"

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

வேலணை கிழக்கைச் சேர்ந்த திரு. பிள்ளையார் செல்லையா அவர்களையும் புத்திரர்கள் திரு. எஸ். பி. சாமி சகோதரர்கள் அவர்களையும் நினைக்கும்போது, இவ்விரு குறள் வெண்பாக்களுமே நினைவுத் திரையில் வருவதுண்டு. திரு. சாமி அவர்களின் நல்லியல்புகள், பண்புகள், ஆற்றல், மதிநுட்பம் ஆகியவை அனைத்தும் தந்தையார் செல்லையா அவர்களுக்கே புகழ் ஆரங்களாக அமைகின்றன. தொட்டதெல்லாம் பொன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு திரு. சாமி சகோதரர்கள் அவர்கள் வணிகத்துறையில் பெரு வளர்ச்சி கண்டதனாலேயே அவையத்து முந்தியிருக்கின்றார்கள். இவ்வாறாகப் பேரும் புகழும் பெற்ற திரு. சாமியும் அமரர் செல்லையாவின் ஏனைய பிள்ளைகளும் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று நல்வாழ்க்கை கண்டிருப்பதனாலே "இவர்களின் தந்தை என்நோற்றான்" என்றுதான் எல்லோரும் கேட்பதுண்டு. தள்ளாத தொண்ணூற்றிரண்டு வயதையும் தாண்டி நின்ற திரு. செல்லையா அவர்கள் உண்மையில் பாக்கியசாலியே.

பொன்னிற மேனி, அதனுள்ளே அன்பே உருவான ஒரு விசால உள்ளம் அந்த உள்ளத்தினுள்ளே பிறரும் வாழ வேண்டும் என்ற பெரும் கருணை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பெருநோக்கு அமரத்துவம் எய்திய செல்லையா அவர்களின் சிறப் பியல்புகளிற் சில. உயர்ந்த கெம்பீரத் தோற்றம் பொன்னைப் பழிக்கும் திருமேனியில் தூய வெண்ணிற ஆடை, அன்பொழுகும் வதனத்தில் தவழ்கின்ற புன்முறுவல் ஆகிய அனைத்துமே எவரையும் கவரவல்லன. முதுமையில் இவ்வாறிருந்தாரெனில் இளமையில் எத்துணை கவர்ச்சியுள்ள புருஷராக இருந்திருப்பார் என்றே பலரும் சொல்லிப் பாராட்டுவதுண்டு.

இத்தகைய பெரியாரை என்றும் நாமெல்லோரும் நினைவில் நிறுத்திவைத்திருக்கும் வகையிலே திரு. சாமி சகோதரர்கள் பன்னிருதிருமுறைகளையும் அழகுறப் பதிப்பித்து தந்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் இறைவனைத் தொழுகின்றபோது எல்லோர்க்கும் பயன் படும் வகையிலே நீடு உபயோகிக்கக்கூடிய முறையில் பழுதடைய முடியாத அழகிய பளிங்கு வர்ண அட்டையில் நல்ல காகிதத்தில் இத்திரட்டினை அச்சிட்டு வழங்கியுள்ளார்கள்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை மெய் நெறிக்குய்ப்பது நாதன் நாமம். எந்நேரமும் நாதனின் நாமம் எம் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கும் வண்ணம் இந்நூலினைத் திரு. சாமி தந்திருக்கின்றார். ஆண்டுதோறும் பெற்றோரது திதி வருகின்ற போது திரு. சாமி சகோதரர்கள் இது போன்று ஒரு நூலினை பெற்றோர்களின் நினைவாக சமர்ப்பிப்பார்களாயின் அமரத்துவம் எய்திய அப்பெரியாரின் ஆன்மா மகிழ்ச்சியடையவே செய்யும். தமிழ் அன்னைக்கும் இது ஒரு தமிழ் மாலையாகிவிடும்.

23/1, மோர் ரோட்,
வெள்ளவத்தை
கொழும்பு - 6.

R. சிவகுருநாதன்,
பிரதம ஆசிரியர்,
தினகரன், லேக் ஹவுஸ்,

## நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பு ஒழித்த
புகலியர் கோன் கழல்கள் போற்றி
ஆழி மிசைக் கல் மிதப்பில்
அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திரு நாவ லூர்
வன் தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திரு வாத
ஊரர் திருத் தாள் போற்றி

—உமாபதி சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# வேலணை கிழக்கு

# பிள்ளையார் - செல்லையா

## அவர்களது

பிரிவு குறித்த

## இரங்கற்பாக்கள்

---

### விருத்தப்பா

1. வீசையர் செல்லையா என்று
வேலணை கிழக்கில் வாழ்ந்தாய்
ஆசைகள் பலவும் அற்றாய்
அன்புசேர் உள்ளம் உற்றாய்
தேசெலாம ஒருங்கு சேர்ந்த
திவ்விய உடலம் உற்றாய்
பேசரும் பெருமை உற்றாய்
பிள்ளையார் வணக்கம் உற்றாய்.

2. பொன்போலும் வடிவம் என்று
புலவர்கள் வருணிப் பார்கள்
நின்பெரும் வடிவம் அண்ணா
அதனையும் வென்ற தம்மா
அன்புசேர் மனத்தி னனே
அறம் நின்ற உள்ளத் தானே
உன்பெருங் குணத்தி னலே
உறுதுயர் அற்று வாழ்ந்தாய்.

3. தொண்ணூறின் வயதின் மேலாய்த்
தோன்றியே மண்ணில் வாழ்ந்தாய்
கண்ணூ றிலாது நீயும்
கவினுடன் வாழ்ந்த தன்மை
எண்ணியே எண்ணிப் பார்த்தோம்
எதனாலும் அல்ல நின்றன்
திண்ணிய அன்பு சேர்ந்த
மனத்தினல் என்று கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மனத்தினில் மாசில் லாத
தன்மையே அறம தென்றார்
அனைத்துல கமும் வாழத்
திருக்குறள் தந்த ஐயன்
இனத்தவர் மகிழ்வில் துன்பில்
இணைந்துமே அநுப வித்த
நலத்தகு மனத்தின் தூயோய்
நாளுமே மகிழ்வில் வாழ்ந்தாய்.

5. மனமது நலமே யானல்
நன்மக்கள் பலரு முண்டாம்
இனநலன் பலவும் உண்டாம்
இதனிலே ஐயம் வேண்டாம்
அனைவரும் இதனை உணர்கெனப்
போதித்தார் அந்த வள்ளுவர்
உனதுநன் வாழ்வில் நாங்கள்
உண்மையாய்க், கண்டோம், இதனை

6. வாதாவி கந்தையா தந்த
வனப்புள நல்ல தங்கம்
போதாய் நாளும் இருக்கப்
புண்ணிய நறவை உண்டு
மேதா விலாச முள்ள
ஆண் மக்கள் ஆறு பேருடன்
ஏதமில் கற்பு வாய்ந்த
எழில்மகள் ஒன்று பெற்றாய்.

7. வணிகத்தில் சிறந்து நிற்கும்
மக்களின் வாழ்வைக் கண்டாய்
துணிவுடன் அறிவு தூய்மை
துலங்கிட அவர்கள் நின்று
பணிவுடன் நின்னைப் போற்றிப்
பல தாபனங்கட்கு நின்பேர்.
தணியாத காத லோடு
சூட்டியே சிறப்புத் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முதன்மையை விரும்பி டாது
முற்றிய அன்பில் நின்றே
இதமுடன் மக்கள் பேணி
இனத்தவர் அயலா ரோடு
கதமிலா வாழ்வு வாழ்ந்தாய்
கவின்மனத் தூய்மை யாலே
வதனத்தில் நகையும் உற்ருய்
உடையுமே வெண்மை வாய்ந்தாய்.

9. என்னது மணத்தின் போதில்
இன்புடன் அவை யிருந்தே
நின்பெரும் மனத்தால் வாழ்த்தி
நிகரிலா அன்பி ைேடும்
அன்புள மகற்கு முத்தம்
அளிப்பது போல முத்தம்
என்னது முகத்தில் தந்த
ஏந்தலே மகிழ்ந்து வாழி.

வேறு

10. ஆளுயரம் பொன்மை நிறம்
அன்பான புன் சிரிப்பு
கோளில்லா நல்ல மனம்
கொள்கையிலே மிகத் துணிவு
நாளுமே வெள்ளுடுப்பு
நற்குலத்தின் வெளிப்பாடு
ஏழுலகுஞ் சிறப்புறுவார்
இறைவனடி சேர்ந்திருப்பார்.

ஆக்கியோன்:
அன்புத் தம்பி
**வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம்**

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி,
20-10-89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிவநெறித் திருமுறைகளைத் தொகுத்து பன்னிரு திருமுறைத் திரட்டாக வெளியிட்டுள்ள திரு. எஸ். பி. சாமி சகோதரர்களின் இறைபுகழ் பரப்பும் தெய்வீகப் பணி காலநேரம் கருதிய ஒன்றாகும்.

தாய் தந்தையரின் புண்ணியப் பெருவாழ்வு நின்று நிலைக்கும் வகையில் மெய்யடியார்களின் திருப்பாடல்கள் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளையும் ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் என்ற நம்பிக்கையோடு இத் தொகுப்பு வெளிவருகின்றது.

தேவாரத் திருமுறை ஓதும் பழக்கம் இன்று அருகிவருகின்றது. பண்ணோடு இசை பாடும் ஓதுவார்கள் மரபும் மெல்ல மெல்ல இல்லாமற் போகின்றது. இந்தவிதமான சூழ்நிலையிலே வெளி வரும் பன்னிரு திருமுறைத் தொகுப்பு சைவத் தமிழ் மக்களுக்கு தண்ணிழல் தரும் பெருவிருந்தாகும்.

தந்தை தாயார் நினைவாகவும், அவர் பெயர் விளங்கவும் பிள்ளைகள் செய்யும் நற்பணி தெய்வீகப் பணியாக அமைவது நல்லன செய்யும் பண்பாக அமைகின்றது.

செந்தமிழ் பாமாலைகளைப் பாடுபவர்கள், இறைவனைப் பரவு பவர்கள் விளங்கும் புகழ் எல்லாம் பெறுவர் என்பது தேவார முதலியாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் ஆணையாகும். 'ஆணை நமதே' என அவர் தமது முத்திரைக் கவிகளில் இதனைக் கூறியுள்ளார்.

வியன் ஞாலம் எல்லாம் விளங்கும் புகழ் அமரர் வி. பி. செல்லையா அவர்களுக்கும் அவர்தம் மரபைப் பேணும் புதல்வர் களுக்கும் கிடைப்பதாக.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

24, லில்லி அவெனியு,
வெள்ளவத்தை,
30 - 10 - 1989.

ஆ. சிவநேசச்செல்வன்,
பிரதம ஆசிரியர்,
வீரகேசரி/மித்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறை கண்ட
# அமரர் செல்லையா அவர்கள்

உலகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் பிறக்கிறார்கள். அவ்வாறே பல்லாயிரம் பேர் தினமும் மறைகிறார்கள்.

இப்படி மறைபவர்கள் அனைவரையும் நாம் மறக்காமல் மனதில் வைப்பதில்லை. அவர்கள் நினைவு என்றும் நிலைத்திருப்பதற்காக ஏதாவது ஒரு காரியம் செய்வதும் இல்லை.

உலகில், நல்லவர்கள், வல்லவர்கள், சாதனை புரிந்தவர்கள், சன்மார்க்க சீலர்கள், வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றையோரையும் வாழவைத்தவர்கள்—இப்படியானவர்களை மட்டுமே நாம் மனதில் இருத்துகிறோம். நினைவுகூருகிறோம்.

இவ்வண்ணம் நாம் நினைவில் இருத்தும் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர்தான் பிள்ளையார் செல்லையா என்னும் பெரியார்.

நிறை வாழ்வு பெற்று ஆயிரம் பிறை கண்டவர் அமரர் செல்லையா அவர்கள். ஒரு மனிதர் இந்த நூற்றாண்டில் ஆயிரம் பிறை காண்பது என்பது அரிய காரியமாகும். ஒருவர் எண்பத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்தால்தான் ஆயிரம் பிறைகளைக் கண்டிருக்க முடியும். பிள்ளையார் செல்லையா அவர்களோ தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்ந்து, இல்லறத்தினை நல்லறமாக, நல்லதங்கம் என்ற நல்லாளுடன் நடாத்தி, ஆறு ஆண் மகவுகளையும், ஒரு பெண் மகவையும் நன்மக்களாகப் பெற்று, மனங்களிக்க இனந்தழுவி இருந்த அமரர் செல்லையா அவர்கள் அனைவருடைய அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரராக விளங்கினார்.

அவர் பெற்ற ஆண் பிள்ளைகள் அனைவரும் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்ற வர்த்தகர்களாக இன்று விளங்குகின்றார்கள். அன்னாரின் பிள்ளைகளால் இந்த ''பன்னிரு திருமுறைத் திரட்டு'' என்ற நூல் அவர்களின் பெற்றோரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகிறது.

இந்த நூலினை நல்ல முறையில் சென்னை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலய தலைமை ஓதுவார் லால்குடி திரு. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும், தருமபுரம் திரு. சுவாமிநாதன் அவர்களும் சேர்ந்து அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

தேவார திருவாசகங்களைத் தேர்ந்தெடுத்துப் பக்தியுடன் பாடிப் படிக்க விரும்பும் பக்தர்களுக்கு இந்நூல் ஒரு கைநூலாகப் பயன்படும் என்பதில் ஐயம் இல்லை. அத்தோடு இந்நூல், சமய ஸ்தாபனங்களுக்கும், கோயில்களுக்கும், பாடசாலைகளுக்கும் இன்றியமையாத ஒரு நூலாக அமையும் என்றும் சொல்லலாம்.

சிறந்த முறையில், அழகாகவும் அச்சு சுத்தமாகவும், சமய குரவர் நால்வர் படத்துடன் கண்கவர் முறையில் இந்த "பன்னிரு திருமுறைத் திரட்டு" என்ற பனுவலை வெளியிடும் என் நண்பரும் அன்பருமான திரு. எஸ். பி. சாமி அவர்களைப் பாராட்டுகின்றேன்.

5, குணசேன மாவத்தை,
கொழும்பு - 12.
3 - 11 - 1989.

எஸ். டி. சிவநாயகம்
பிரதம ஆசிரியர்
தினபதி/சிந்தாமணி

## சரஸ்வதி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம்
அடைக்கலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. தி. இராச. கல்யாணசுந்தரம் இ.ஆ.ப.,

### ''இசைவிரும்பும் கூத்தனார்''

இறைவன் இசைவடிவமானவன். ''ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளவன்'' என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' என்றார் திருநாவுக்கரசர் பெரு மான். பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் பெருமானோ இறைவனை ''இசைவிரும்பும் கூத்தனார்'' என்றார். இசை என்பது இறைவனது நிவேதனப் பொருள்.

இறைவன்பால் கொண்ட இடையறாக் காதலால் ஆரா அன்பால், மாறா பற்றினால் இறைவனது இயல்புகளை எண்ணி எண்ணி கசிந்து கண்ணீர்மல்கி நமது நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக என்புகுழைய பாடியருளினார்கள் நமது சமயக் குரவர்கள். திருமுறை வாணர்களும் பின்வந்த அனுபூதி மான் களாகிய அருணகிரிப் பெருமான், தாயுமானவர், பட்டினத்தடிகள் குமரகுருபரர், வள்ளலார், ஆகியோர்...இசை வழியாக இறை உணர்வை எழுப்பி இறை மாட்சியை நுகரச் செய்தவர்கள். அவர்கள் பாடியருளிச் செய்த அருள்கொழிக்கும் பாடல்கள் அனைத்தும் இசைவடிவமான இறைவனுக்கு உரிய சிறந்த தோத் திரங்கள். அவை:

...ஓதவும் உன்னவும் உலப்பிலா மகிழ்வைத்தருவன.

...சொல்லாட்சி கருத்தாட்சி உள்ளன.

...செந்தமிழ் மொழிவளம் நிரம்பியன.

...இசைவளம் மிக்கவை. இன்பநலம் பயப்பவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தத்துவக் கருத்துக்கள் மலிந்தவை.

...அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களைக் கூறுவன.

...புறஇருள் நீக்கும் பகலவன் போல அகஇருள் நீக்கும் அருள்மணிச் சுடர்கள்.

...மெய்யன்போடு ஓதுபவர்களுக்கு இம்மை மறுமை வீடு எனும் மும்மைப் பெரும் பயன்களையும் ஒருங்களிக்க வல்லன.

...வன்னெஞ்சமாகிய கன்னெஞ்சத்தையும் கரைய வைப்பன.

அதனால்தான் சிவபூசை, குருபூசை, அடியார் பூசை, சிவாலய பூசை திருவிழாக்களில் திருஉலா வரும்போது இறைவன் முன்னும், பின்னும், இத்தகைய, பண்சுமந்த பாடல்கள் பண்டை காலந் தொட்டு நியமமாக ஓதப்பெறும் வழக்கமுடைய தமிழ் மறை களாக கருதப்பட்டு வந்தன. தெய்வப் புலமையுள்ள அருளாளர் களால் பாடப்பெற்ற இத்தகைய அருளொழுகும் பாடல்கள் மலையிலிட்ட மாபெரும் ஒளி விளக்காக மிளிர்ந்து விளங்கு கின்றன.

தமிழக திருக்கோயில்களில் பண்ணார் இன் தமிழாய், பாட்ட கத்து இசையாய் உள்ள இறைவன் திருமுன் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு திருமுறைகள் திருவாசகம், திருப்புகழ், போன்ற தெய்வத் திருப்பாடல்கள் ஓதப்பட்டு வருகின்றன. அவ்விதம் ஓதப்படும் அருளிசைப் பாடல்கள், மரபு வழுவாது, பண்கள் மாறாது நெறி முறை பிசகாது பாடப்பெறல் வேண்டும் என்று அறநிலயத்துறை விரும்புகிறது. இறைவன் திருமுன் பன்னிருதிருமுறைகளை ஓது கின்ற பண்ணிசைவாணர்களாகிய ஓதுவா மூர்த்திகள், திருமுறை கள் மற்றும் இதர தெய்வப் பனுவல்கள் முழுமையும் பாடாந்திர மாக கொள்ளாவிட்டாலும், முக்கிய பதிகங்களையாவது மனனம் செய்ய பன்னிரு திருமுறைகளில் அற்புத பதிகங்கள் 53 பதிகங் களை மட்டும் தேர்ந்தெடுத்து

''பன்னிரு திருமுறைத் திரட்டு''

என்ற இந்த அருள் நூல் தயாரிக்கப்பட்டு யுனைட்டெட் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது ஓதுவாமூர்த்திகளின் கையேடாக இருக்குமென்பதில் ஐயமில்லை. மற்றும் தெய்வத் திருவருள்நூலின் சிறு தொகுதி என்றாலும் சிறிது தமிழ் கற்றாரும் எளிதில் கற்று உணருமாறு ஒவ்வொருவர் வழிபாட்டறையிலும் அருள்நிதியாக பயன்பட வேண்டும் என்றும் பெரிதும் நம்புகிறோம்.

இந்த அரிய நூலை தொகுத்து வெளியிட முன்வந்த யுனைட் டெட் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்கும் அற்புத பதி கங்கள் ஐம்பத்து மூன்றையும் தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்கிய தருமபுரம் திரு. சுவாமிநாதன் அவர்கட்கும், அருள்மிகு கபாலீச்சு வரர் கோயில் தலைமை ஓதுவார்மூர்த்தி திரு. லால்குடி சுவாமிநாதன் அவர்கட்கும், மிகக் குறுகிய காலத்தில் செப்பமான முறையில் அழகாக அச்சிட்டு வழங்கிய யுனைட்டெட் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட் அச்சகத்தாருக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை - 34.
10 - 10 - 89.

தி. இராச. கல்யாண சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்களின் ஆத்மசாந்திக்கு
எங்களின் இதயபூர்வமான பிரார்த்தனைகள்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உடம்பு இரைதேடுவதுபோல, உயிர் இறையைத் தேட வேண்டும். உடம்பை உணவு வளர்க்கும். உயிரை உணர்வு வளர்க்கும். ஆதலினல் தன்னையும் தன் தலைவனையும், தலைவனுகிய இறைவனின் திருவருட்செயலையும், ஆற்றலையும் சிந்தித்தும் அவன் புகழைப் பாடியும் வழிபடுபவன் உணர்வு பெறுவான். ஒவ்வொரு மனிதனும் சிவ நெறியையும் ஆற்றலையும் ஆராய்தல் வேண்டும். இவ்வாறு ஆராயும் தன்மை யில்லாதவனிடம் இறைவன் உள்நின்று இருக்கிருனும்.

" ஓராதார் உள்ளத்தில் ஒளிக்கும்
ஒளியானே "

—மணிவாசகப் பெருமான்

என்ற அருள்வாக்கின்படி மனித இனம் உய்வதற்குரிய உயர்ந்த ஞான வழிகளிலும் ஞான நூல்களையும் ஓதி உணர்ந்து சிந்தித்து தெளிவு பெறுதல் வேண்டும்.

ஞான நூலை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் ஈன
மில்லாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனை சிந்திக்கும் எழில் ஞானபூசை
ஊனமிலா கன்மங்கள் தபஞ்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன்று இவையூட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தால் அவனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோர் எல்லாம்

—சிவஞான சித்தியார்

கருணையே வடிவாகிய கண்ணுதர் கடவுளாம் பரமேஸ்வரன் வேத ஆகமங்களுக்குத் தலைவன் என மறைகள் பேசுகின்றன. தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைகளைக் கேட்கும் இச்சை மிகுதியால் பற்பல திருவிளையாடல்கள் செய்து மகிழ்ந்தான் என்பதை சைவ சமய சரித்திரங்கள் வாயிலாக அறிந்து மகிழ்கிருேம்.

மயிலையிலே பூம்பாவையை உயிர்ப்பிக்கச் செய்ததும், அதே போன்று திருமருகலில் வணிக வாலிபனை அரவந் தீண்டி மாண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வாலிபனை எழுப்பியதும், அவிநாசியிலே முதலையுண்ட அந்தணச் சிறுவனை எழுப்பியதும், அரவந்தீண்டிய அப்பூதி அடிகளின் பெரிய திருநாவுக்கரசை எழுப்பியதும், விருதாசலத்தில் போட்ட பொன்னை திருவாரூரிலே கண்டெடுத்ததும், இதை திருமுறை தான் என நாம் அறிகிறோம்.

பன்னிரு திருமுறையிலே மூவர் தேவாரம் முதலிடம் பெற்றது. அப்பர் பாடியது தான் தேவாரம் எனப்படும். திருஞான சம்பந்தர் பாடி அருளியது திருக்கடைக் காப்பு. சுந்தரர் பாடியது திருப்பாட்டு என பெயர்ப்படும்.

மணிவாசகப் பெருமான் பாடியது திருவாசகம். இறைவனிடத்தே அன்பு விளைவிக்கின்ற பாடல் தேவாரம். அதை நமக்கு பாடிக் கொடுத்தவர் அப்பர் பெருமான். தேவார இன்பம் தெய்வீகத்தன்மை உடையது.

''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்''

என்பதற்குச்சான்றாக திருமுறைத்தேவாரப்பண்இசைத்து பாடினால் மெய்யுருகும், ஊனுருகும், எலும்புருகும். தேவாரத்திற்கென்றேதனி இசை இறைவனாலேயே ஏற்படுத்திய பண்ணிசை தேவாரப் பண்ணிசையாகும். தெய்வீக பண்ணிசையை நெஞ்சுருக மனமுருக பாடினால் தணிந்த பால் மடி உடைய தெய்வீகப்பசு, அந்த இசையைப் கேட்டுதன் தலையை நிமிர்த்தி இசை ஒலி வரும் திசையை நோக்கி பார்த்து ரசிக்கும், சீறி அழக் கூடிய பச்சிளங்குழந்தை கூட அந்த இசையை கேட்டு அழுகையை நிறுத்தும் என்று ''பத்மபாதர்'' சொல்வார். திருத்தேவாரமும் திருவாசமும் திருப்பல்லாண்டும் திருமூலர் திருமந்திரமும் திருவிசைப்பாவும் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமும் பன்னிரு திருமுறையாக நமக்கு கிடைத்த தெய்வீக அருட்செல்வங்கள் நிறைந்த பொக்கிஷமாகும்.

இந்த பன்னிரு திருமுறை மக்களுக்குப் பயன்பட வேண்டி திரு. எஸ். பி. சாமி சகோதரர்களினால் அவர்களின் பெற்றோரின் ஞாபகார்த்தமாக வெளியிட்டிருக்கும் இந்நூல் ஓதுவார் மூர்த்திகள் அருகி வரும் இக்கால கட்டத்தில் ஓதுவார் மூர்த்திகளுக்கும் சைவ மக்களுக்கும் நல்ல பயனை அளிக்கும் என நம்புகின்றேன்.

நா. சுப்பிரமணியன்
(செயலாளர்)
வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

## திருஞானசம்பந்த சுவாமிகள்


| | | பக்கம் |
|---|---|---|
| தோடுடைய செவியன் | ... | 1 |
| மடையில் வாளை | ... | 2 |
| எந்தையீசன் | ... | 4 |
| துணிவளர் திங்கள் | ... | 6 |
| அவ்வினைக்கிவ்வினை | ... | 8 |
| பாடன் மறை | ... | 10 |
| இடரினுந்தளரினும் | ... | 12 |
| மாதர் மடப்பிடியும் | ... | 14 |
| சடையாயெனுமால் | ... | 17 |
| வாசிதீரவே | ... | 18 |
| சதுரம் மறைதான் | ... | 19 |
| வேயுறு தோளிபங்கன் | ... | 21 |
| செய்யனே திருஆலவாய் | ... | 23 |
| துஞ்சலுஞ் துஞ்சல் | ... | 25 |
| கொட்டமே கமழும் | ... | 26 |
| மந்திரமாவது | ... | 28 |
| மறையுடையாய் | ... | 29 |
| பூத்தேர்ந்தாயன | ... | 31 |
| மட்டிட்ட புன்னை | ... | 32 |
| கல்லூர்ப் பெருமணம் | ... | 34 |
| காதலாகிக் கசிந்து | ... | 35 |
| ஒருருவாயினே | ... | 37 |


## திருநாவுக்கரசு சுவாமிகள்


| | | |
|---|---|---|
| கூற்ருயினவாறு | ... | 39 |
| நாமார்க்குங் குடியல்லோம் | ... | 41 |
| பொன்ஞர் திருவடிக்கு | ... | 44 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


| | | |
|---|---|---|
| கருநட்டகண்டனை | ... | 44 |
| ஒன்று கொலாமவர் | ... | 46 |
| பண்ணினேர் மொழியாள் | ... | 47 |
| மாதர்ப்பிறை கண்ணியானை | ... | 49 |
| மாசில் வீணையும் | ... | 50 |
| சுண்ண வெண்சந்தன | ... | 52 |
| சொற்றுணை வேதியன் | ... | 53 |
| கரவாடும் வன்னெஞ்சர் | ... | 55 |
| உடையர் கோவணம் | ... | 56 |
| எண்ணுக்கேன் என்சொல்லி | ... | 58 |


## சுந்தரமூர்த்தி சுவாமிகள்


| | | |
|---|---|---|
| பித்தாபிறை | ... | 61 |
| மலையாரருவி | ... | 62 |
| தம்மானை அறியாத | ... | 64 |
| கரையுங் கடலும் | ... | 66 |
| நீளநினைந்தடியேன் | ... | 68 |
| பொன்செய்த மேனியினீர் | ... | 69 |
| பொன்னுமெய்ப் பொருளும் | ... | 71 |
| இத்தனையா மாற்றை | ... | 73 |
| பிழையுளன | ... | 75 |
| ஆலந்தானுகந்து | ... | 76 |
| மீளா வடிமை | ... | 79 |
| பரவும் பரிசொன்று | ... | 80 |
| தில்லைவாழ் அந்தணர் | ... | 82 |
| தம்மையே புகழ்ந்து | ... | 85 |
| மற்றுப் பற்றன | ... | 87 |
| ஏற்றான் மறக்கேன் | ... | 90 |
| தானெனை முன் படைத்தான் | ... | 91 |
| கொடுகு வெஞ்சிலை | ... | 93 |


## மாணிக்க வாசக சுவாமிகள்

**திருப்பள்ளி எழுச்சி**


| | | |
|---|---|---|
| போற்றி என் வாழ்முதல் | ... | 97 |


**திருவெம்பாவை**


| | | |
|---|---|---|
| ஆதியும் அந்தமும் | ... | 99 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

**சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க ... 104

**அச்சோப்பதிகம்**

முத்திநெறி அறியாத ... 107

**திருகோவையார்**

திருவளர் தாமரை ... 108

காரணி கற்பகம் ... ,,

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே ... 109

கற்றவர் விழுங்கும் ... ,,

வைத்த பாதங்கள் ... ,,

அற்புதத் தெய்வம் ... ,,

பாடலங்காரப் பரிசில் ... 110

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை ... 110

ஆரார் வந்தார் ... ,,

பாலுக்கு பாலகன் ... ,,

குழல் ஒலி யாழ் ஒலி ... 111

செல்லாண்ட சுருதி ... ,,

## பத்தாந்திருமுறை

ஐந்து கரத்தனை ... 111

சிவசிவ என்கிலர் ... ,,

அரஹர ... ,,

யாவர்க்குமாம் ... 112

கங்காளன் பூசும் ... ,,

வாயும் மனமும் ... ,,

தேனுக்குள் இன்பம் ... ,,

ஏடங்கை ... ,,

மரத்தில் மறைந்தது ... ,,

மூலன் உரைசெய்து ... ,,

## பதினொராந்திருமுறை

மதிமலி புரிசை ... 113

கொங்கைத் திரங்கி ... ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| பிறந்து மொழி பயின்ற | ... | 113 |
| உன்னை ஒழிய | ... | ,, |
| திருவாக்கும் செய்கருமம் | ... | 114 |
| விநாயகனே | ... | ,, |
| என்றும் அடியவர் | ... | ,, |
| பொன் வண்ணம் | ... | ,, |
| அறிவானுந்தானே | ... | ,, |
| காக்கக்கடவிய நீ | ... | ,, |


## 12-ந் திருமுறை - பெரிய புராணம்

| | | |
|---|---|---|
| உலகெலாம் உணர்ந்து | ... | 115 |
| ஊனடைந்த | ... | ,, |
| எடுக்குமாக்கதை | ... | ,, |
| வேதநெறி | ... | ,, |
| திருநாவுக்கரசு வளர் | ... | ,, |
| சென்ற காலத்தின் | ... | ,, |
| ஐந்து பேரறிவும் | ... | 116 |
| சோதி முத்தின் | ... | ,, |
| நன்மை பெருக | ... | ,, |
| இறவாத இன்ப அன்பு | ... | ,, |
| என்றும் இன்பம் | ... | ,, |
| வையக நீடுக மாமழை | ... | ,, |


## திருப்புகழ்

| | | |
|---|---|---|
| கைத்தல நிறைகனி | ... | 117 |
| சந்ததம் பந்தத் தொடராலே | ... | ,, |
| இயல் இசையில் | ... | ,, |
| நாத விந்து கலாதி | ... | 118 |
| நிறைமதி முகமெனும் | ... | 119 |
| சினத்தவர் முடிக்கும் | ... | ,, |
| அகரமுமாகி | ... | ,, |
| சரண கமலாலயத்தை | ... | 120 |
| அதல சேடனராட | ... | ,, |
| என்னால் பிறக்கவும்—வயலூர் | ... | 121 |
| அயிலொத் தெழு—மயிலை | ... | ,, |
| பத்தியால் யானுன்னை | ... | 122 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

## திருவருட்பா

முன்னவனே யானே ... 122
அப்பா நான் வேண்டுதல் ... ,,
நினைந்து நினைந்து ... ,,
அருட்ஜோதி தெய்வம் ... 123
வாழையடி வாழையென ... ,,
படமுடியாதினித்துயரம் ... ,,
தடித்த ஓர் மகனை ... ,,
நான் கொண்ட விரதம் ... 124
ஒருமையுடன் நினது ... ,,
உளம் எனது வசம் ... ,,
திருவோங்கு ... 125
நீருண்டு பொழிகின்ற ... ,,

## அபிராமி அந்தாதி

சுந்தரி எந்தை துணைவி ... 126
தனந்தரும் ... ,,
விழிக்கே அருளுண்டு ... ,,

## குமரகுருபர சுவாமிகள்

தொடுக்கும் கடவுள் ... 126

## மீனாட்சி பிள்ளைத்தமிழ்

காலத்தொடு ... 127

## கற்பகவல்லியம்மைபதிகம்

இல்லாமை என்னுமொரு ... 127

## அபிராமியம்மைபதிகம்

கலையாத கல்வியும் ... 128

## தக்ஷிணாமூர்த்தி

பூங்கமல வதனமும் ... 128
கல்லாலின் புடையமர்ந்து ... 128a

## அறுபத்துமூவர் துதி

தத்து மூதெ ... 128a

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

## பைரவர்

விரித்தபல் ... 128a

## நந்தி

அங்கணன் கயிலை காக்கும் ... 128a

## சரஸ்வதி

பண்ணும் பரதமும் ... 129

## லட்சுமி

செந்துவர் வாய் ... 129

## திருமால்

குலந்தரும் செல்வமும் தந்திடும் ... 129

## ஆஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் ... 130

## சண்டேசுவரர்

அண்டர்பிரான் ... 130

பன்னிரு திருமுறையாசிரியர்கள் திருப்பெயர்கள் ... 131

## வாழ்த்து

வாழ்க அந்தணர் ... 132
வான்முகில் வழாது ... ,,
ஆறிரு தடந்தோள் வாழ்க (கந்தபுராணம்) ... ,,

திருமுறைகளில் வரும் பண்களும் அதற்கான
இராகங்களும் ... 133
பன்னிருத்திருமுறைக் குறிப்பு ... 134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

### திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

## முதற்றிருமுறை

### திருப்பிரமபுரம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரி யார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவினை வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்க்வர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஓத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவியபெம் மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கோலக்கா

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3

தழுக்கொள் பாவந் தளரவேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4

மயிலார் சாயன் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயர மில்லையே. 7

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. 8

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கோள் வினைபோ யோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருநெல்வாயிலரத்துறை

### பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலைநெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 1

ஈர வார்சடை தன்மே லிளம்பிறை யணிந்தவெம்பெருமான்
சீருஞ் செல்வமு மேத்தாச் சிதடர்க டொழச்செல்வதன்றால்
வாரி மாமல ருந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 2

பிணி கலந்தபுன் சடைமேற் பிறையணி சிவனெனப் பேணிப்
பணி கலந்துசெய் யாத பாவிக டொழச்செல்வ தன்றால்
மணி கலந்துபொன் னுந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 3

துன்ன வாடையொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப் பொருபுன னிவாமல்குகரைமேல்
அன்ன மாருநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகு ரிஞ்சுவெங் காட்டி லாடிய விமலனென் றுள்கி
உருகி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தருகு ரிஞ்சுநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 5

உரவு நீர்ச்சடைக் கரந்த வொருவனென் றுள்குளிர்ந்தேத்திப்
பரவி நைபவர்க் கல்லாற் பரிந்துகை கூடுவ தன்றால்
குரவ நீடுயர் சோலைக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அரவ மாரு நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 6

நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 7

செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான் போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம்மருளே. 8

நுணங்கு நூலயன் மாலு மிருவரு நோக்கரி யானை
வணங்கி நைபவர்க் கல்லால் வந்துகை கூடுவ தன்றால்
மணங்க மழ்ந்துபொன் னுந்தி வருபுன னிவாமல்குகரைமேல்
அணங்குஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம்மருளே. 9

சாக்கி யப்படு வாருஞ் சமண்படு வார்களு மற்றும்
பாக்கி யப்பட கில்லாப் பாவிக டொழச்செல்வ தன்றால்
பூக்க மழ்ந்துபொன் னுந்திப் பொருபுன னிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம்மருளே 10

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த வரத்துறை யடிகடம் மருளை
முறைமை யாற்சொன்ன பாடன்மொழியு மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லைப் பாட்டிவை பத்தும்வல் லார்க்கே 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாச்சிலாச்சிராமம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்க டுளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ வேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதை செய்வதோ விவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
கனறரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர்தம்பானறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழ ருளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ விவர்சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 6

பொங்கிளநாகமோ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ விவர்சார்வே. 7

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவணனையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கடேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ விவர்சேர்வே. 8

மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ விவர்பண்பே. 9

நாணொடுகூடிய சாயினரேனு
நகுவ ரவரிருபோதும்
ஊனொடுகூடிய வுட்குநகையா
லுரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணொடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ விவர்பொற்பே. 10

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
வாச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
றகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

**பொது**

## திருநீலகண்டம்

### பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 4

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 5

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 6

❖ ❖ ❖ ❖ ❖ ❖ 7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முக னாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய வடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குது நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 9

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

(2) திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பட்டீச்சரம்

### திருவிராகம் பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகமதின் மூன்றொர்கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழையையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே. 1

நீரின்மலி புன்சடையரர் நீளரவு
கச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது வேந்தியுடை
கோவணமு மானினுரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல்செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழையை பட்டிசர
மேத்தவினை பற்றழியுமே. 2

காலமட வார்கள்புன லாடுவது
கௌவைகடி யார்மறுகெலாம்
மாலைமண நாறுபழை யாறைமழ
பாடியழ காயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பனுறை
பட்டிசர மேபரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி
விண்ணுலக மாளுமவரே. 3

கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக
மேத்துகமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட
வாடவல பான்மதியினான்
மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி
பட்டிசர மேமருவுவார்
விண்ணின்மிசை வாழுமிமை யோரொடுட
னாதலது மேவலெளிதே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவமுழ வதிரமழ பாடிமலி
    மத்தவிழ வார்க்கவரையார்
பருவமழை பண்கவர்செய் பட்டிசர
    மேயபடர் புன்சடையினுன்
வெருவமத யானையுரி போர்த்துமையை
    யஞ்சவரு வெள்விடையினுன்
உருவமெரி கழல்கடொழ வுள்ளமுடை
    யாரையடை யாவினைகளே. 5

மறையினெலி கீதமொடு பாடுவன
    பூதமடி மருவிவிரவார்
பறையினெலி பெருகநிகழ் நட்டமமர்
    பட்டிசர மேயபணிகூர்
பிறையினெடு மருவியதொர் சடையினிடை
    யேற்றபுன லேற்றநிலையாம்
இறைவனடி முறைமுறையி னேத்துமவர்
    தீத்தொழில்க ளில்லர்மிகவே. 6

பிறவிபிணி மூப்பினெடு நீங்கியிமை
    யோருலகு பேணலுறுவார்
துறவியெனு முள்ளமுடை யார்கள்கொடி
    வீதியழ காயதொகுசீர்
இறைவனுறை பட்டிசர மேத்தியெழு
    வார்கள்வினை யேதுமிலவாய்
நறவவிரை யாலுமொழி யாலும்வழி
    பாடுமற வாதவவரே. 7

நேசமிகு தோள்வலவ ணுகியிறை
    வன்மலையை நீக்கியிடலும்
நீசன்விறல் வாட்டிவரை யுற்றதுண
    ராதநிரம் பாமதியினுன்
ஈசனுறை பட்டிசர மேத்தியெழு
    வார்கள்வினை யேதுமிலவாய்
நாசமற வேண்டுதனி ணண்ணலெளி
    தாமமரர் விண்ணுலகமே. 8

தூயமல ராணுநெடி யானுமறி
    யாரவன தோற்றநிலையின்
ஏயவகை யானதனை யாரதறி
    வாரணிகொண் மார்பினகலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயநல நீறதணி வானுமைத
　　ளேடுமுறை பட்டிசரமே
மேயவன தீரடிய மேத்தவெளி
　　தாகுநல மேலுலகமே. 9

தடுக்கினையி டுக்கிமட வார்களிடு
　　பிண்டமது வுண்டுழறரும்
கடுப்பொடியு டற்கவசர் கத்துமொழி
　　காதல்செய்தி டாதுகமழ்சேர்
மடைக்கயல்வ யற்கொண்மழ பாடிநகர்
　　நீடுபழை யாறையதனுள்
படைக்கொருக ரத்தன்மிகு பட்டிசர
　　மேத்தவினை பற்றறுதலே. 10

மந்தமலி சோலைமழ பாடிநகர்
　　நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
　　மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி
　　ஞானசம் பந்தனணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
　　தொண்டர்வினை நிற்பதிலவே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவாவடுதுறை

### நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புன றயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடன் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றுதென்னாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி ளெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்னா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றுதென்னா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடு துறை யரனே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
ஒண்மல ரடியலா லுரையாதென்னுக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றுதென்னுப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. 10

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருத்தருமபுரம்

### பண் - யாழ்மூரி

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் குமலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே. 1

பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணி தடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புன லரவம்வைகிய சடையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குக டற்றிரையா லுதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொலிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே. 2

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொடேோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும்முடைதலை கலனுப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநற் றருமபு ரம்பதியே. 3

வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந்துழை தருமபு ரம்பதியே. 4

நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வகொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடற் றடர்ந் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடி படு செடி பொழிற் றருமபு ரம்பதியே. 5

கூழையங் கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃ கறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள் ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல் புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. 7

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முறையின் னத ளும்முடை யாடையர்
கொலேம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. 8

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும் வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலே தனிம் மலே யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொ டாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. 9

புத்தர்க டத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
மத்தர்க ளத்தவமெய்ப் பய னுகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலேப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலே மாதுமை பொன்னணி
புணர்ம் முலே யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம் பொழிற் றருமபு ரம்பதியே. 10

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொருவு புன றிருவு வமர் புகல்லியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே 11

திருச்சிற்றம்பலம்

திருமருகல்

## பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே. 1

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
ஏந்தாய் தகுமோ விவளே சறவே. 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணி நீ லவண்ணம் முகிறேன் றியன்ன
மணி நீ லகண்டம் முடையாய் மருகல்
கணி நீ லவண்டார் குழலா ளிவடன்
அணி நீ லவொண்கண் ணயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனு
எழுவா ணிவனா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனுய்
வலங்கொண் மதிள்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே. 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே. 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியில் லன்செய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவீழிமிழலை

### திருவிருக்குறள்

### பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே. 1
இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய மேனியீர், மெய்கொண் மிழலையீர்
பைகொ ளரவினீர், உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறு மருளுமே. 4

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேம நல்குமே. 5

பிணிகொள் சடையினீர், மணிகொண் மிடறினீர்
அணிகொண் மிழலையீர், பணிகொண் டருளுமே. 6

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

அரக்க னெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

அயனு மாலுமாய், முயலு முடியினீர்
இயலு மிழலையீர், பயனு மருளுமே. 9

பறிகொ டலையினர், அறிவ தறிகிலார்
வெறிகொண் மிழலையீர், பிறிவ தரியதே. 10

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

## திருமறைக்காடு

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே. 1

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவங் குருக்கத் திகள்புன் னைகண்ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைகாட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மேல்
அரவம் மதியோ டடைவித் தலழகே. 3

படர்செம் பவளத் தொடுபன் மலர்முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
உடலம் முமைபங் கமதா கியுமென்கொல்
கடனஞ் சமுதா வதுவுண் டகருத்தே. 4

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத் தவிருந் தநீயென்கொல்
கானார் கடுவே டுவனா னகருத்தே. 5

பலகா லங்கள்வே தங்கள்பா தங்கள்போற்றி
மலரால் வழிபா டுசெய்மா மறைக்காடா
உலகே முடையாய் கடைதோ றுமுன்னென்கொல்
தலைசேர் பலிகொண் டதிலுண் டதுதானே. 6

வேலா வலயத் தயலே மிளிர்வெய்தும்
சேலார் திருமா மறைக்காட் டுறைசெல்வா
மாலோ டயனிந் திரனஞ் சமுனென்கொல்
காலார் சிலைக்கா மனைக்காய்ந் தகருத்தே. 7

கலங்கொள் கடலோ தமுலா வுங்கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கை யுடையா னடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன் றியருள் செய்தவாறே. 8

கோனென் றுபல்கோ டியுருத் திரர்போற்றும்
தேனம் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனங் கழுகா னவருன் னைமுனென்கொல்
வானந் தலமண் டியுங்கண் டிலாவாறே. 9

வேதம் பலவோ மம்வியந் தடிபோற்ற
ஓதம் முலவும் மறைகாட் டிலுறைவாய்
ஏதில் சமண்சாக் கியர்வாக் கிவையென்கொல்
ஆத ரொடுதா மலர்தூற் றியவாறே. 10

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் னிசைமா லையீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது

## கோளறு திருப்பதிகம்

### பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 1

என்பொடுகொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள்களவைதாம்
அன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 2

உருவளர்பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும்வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கண் முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
திருமகள்கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வமானபலவும்
அருநெதிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 3

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையானபூதமவையும்
அஞ்சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 5

வாள்வரியதளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 6

செப்பிளமுலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாத மிகையானபித்தும்
வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 7

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஏழ்கடல்சூழிலங்கை யரையன்றனோடு
மிடரானவந்து நலியா
ஆழ்கடனல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 8

பலபலவேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசையோனுமாலு மறையோடுதேவர்
வருகாலமானபலவும்
அலைகடன்மேரு நல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 9

கொத்தலர்குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. 10

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனுதியாய பிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவாலவாய்

### பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னேதிரு வாலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் றென்னன் பாண்டியற் காகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச்
சொக்க னேஞ்யச லென்றருள் செய்யெனை
எக்க ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்ட னேதிரு வாலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்றென்னன் பாண்டியற் காகவே. 4

நண்ண லார்புர மூன்றெரி யாலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யற்றமிழ்ப் பாண்டியற் காகவே. 5

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்றென்னன் பாண்டியற் காகவே. 6

செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்க ணஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லாரமண் கைய ரிடுங்கனல்
பங்கமி றென்னன் பாண்டியற் காகவே. 7

தூர்த்தன் வீரந் தொலைத்தரு ளாலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்றென்னன் பாண்டியற் காகவே. 8

தாவி னயன் றனறி யாவகை
மேவி னய்திரு வாலவா யாய்அருள்
தூவி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னன்றென்னன் பாண்டியற் காகவே. 9

எண்டி சைக்கெழி லாலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் றென்னன் பாண்டியற் காகவே. 10

அப்ப னலவா யாதி யருளினல்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது

## பஞ்சாக்கரத்திருப்பதிகம்

### பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னுநாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படமஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன வஞ்செ ழுத்துமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன வஞ்செ ழுத்துமே. 8

கார்வண னுன்முகன் காணு தற்கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மானவ வஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்த னுன்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கொள்ளம்பூதூர்

### ஈரடிமேல்வைப்பு பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 1

கோட்ட கக்கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 2

குலையினுர் தெங்குசூழ் கொள்ளம் பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவளை கண்மலருங் கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 4

கொன்றைபொன் சொரியுங் கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழு
நல்கு மாறரு ணம்பனே. 5

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய வடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 6

ஆறுவந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய விறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 7

குரக்கினம் பயிலுங் கொள்ளம் பூதூர்
அரக்கனைச் செற்ற வாதியை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 8

பருவரா லுகளுங் கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழ லுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 9

நீரகக் கழனிக் கொள்ளம் பூதூர்த்
தேரமண் செற்ற செல்வனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 10

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுண் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலவாய்

## திருநீற்றுப்பதிகம்

### பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே, 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. 4

பூச வினியது நீ நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே. 5

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. 6

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் றிருநீறே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடாக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருநெடுங்களம்

### பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினு லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 1

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே 2

நின்னடியே வழிபடுவா னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடர்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்ற ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா வன்பினோடுந் தலைவநின்ற ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ னடியிணையே பரவும்
திருத்தர்கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 7

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 9

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சமில்லா வாய்மொழியாற் றோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 10

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோ னலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவோத்தூர்

### பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும் தாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. 3

தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயரு ணல்குமே. 4

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றுடுவர்
அழையா மேயரு ணல்குமே. 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயரு ணல்குமே. 6

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ணல்குமே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று னிம்மலே யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. 8

நன்று நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்று மொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. 9

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே. 10

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

## திருமயிலாப்பூர்

### பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் ஈரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். ௭

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். ௮

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். 10

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வலார்
வான்சம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநல்லூர்ப்பெருமணம்

### பண் - அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே. 1

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே. 2

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறு நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. 6

மேகத்த கண்டனெண் டோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தொலொடு பந்தித்த
நாகத்த னல்லூர்ப் பெருமணத் தானல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 8

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 9

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாடொழ வீடெளி தாமே. 10

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெரும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 11

திருச்சிற்றம்பலம்

பொது

## நமச்சிவாயத் திருப்பதிகம்

### பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினுல்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன ஞம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத ஞம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளும நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பிரமபுரம்

# திருவெழுகூற்றிருக்கை

## பண் - வியாழக்குறிஞ்சி

### திருச்சிற்றம்பலம்

ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை

ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இரு நதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்

கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்

அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

## திருவதிகைவீரட்டானம்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
    கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
    பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
    குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே. 1

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தே
    னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
    வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
    நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே. 2

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
    படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
    சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகத்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 3

முன்னம் மடியே னறியா மையினுன்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியேன் உமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடன் ஆவதுதான்
அன்ன நடையா அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 4

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 5

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 8

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 9

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனை மால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

## மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 1

(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலிடமே யிடமாக வூர்க டோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்க டீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. 2

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோ
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. 3

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே. 4

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்தோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. 5

மூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றேமே. 6

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றேமே. 7

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலு நினையப் பெற்றோ
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லா மறந்தோ மன்றே.
வந்தீரார் மன்னவனு வான்றா னாரே. 8

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதண்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே. 9

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாக்க கொள்ளோமெண் குணத்து ளோமே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தூங்கானைமாடம்

### திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே. 1

ஆவா சிறுதொண்ட னென்னினைந் தானென் றரும்பிணிநோய்
காவா தொழியிற் கலக்குமென் மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப் பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுட் டூங்கானை மாடத்தெம் புண்ணியனே. 2

* * * * * * 3 - 9

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந் தத்துவனே. 10

திருச்சிற்றம்பலம்

## கோயில்

### திருவிருத்தம் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்க டில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்பதென்ன
நன்மன வாநவி றில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே. 3

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே. 5

பூத்தன பொற்சடை போன்போன் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள ரோவென்றன் கோல்வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண் ணீறுஞ் சுரிகுழலான்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன் குரைகழலே. 7

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
றுடைக்கினும் போகேன் றொழுது வணங்கி தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே. 8

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து புரிசடைகண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கர்வேடச்
சின்னத்தி னான்மலி தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்னத்த னாடல்கண் டின்புற்ற தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட்கொண்டதே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது

## விடந்தீர்த்ததிருப்பதிகம்

### பண் - இந்தளம்

### திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. 1

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே. 2

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வின்னாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 3

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவ ரூர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே. 4

அஞ்சகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே. 5

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 6

ஏழுகொ லாமவ ரூழிப டைத்தன
ஏழுகொ லாமவர் கண்டவி ருங்கடல்
ஏழுகொ லாமவ ராளுமு லகங்கள்
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுக்கொ லாமவ ரீறில்பெ ருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடுமி னமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினி னூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே. 9

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே. 10

திருச்சிற்றம்பலம்

## திருமறைக்காடு

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய வப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்டசு வண்டரோ
விரிகொள் கோவண வாடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையி னீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடு மணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய வெம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவையாறு

### பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 1

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்து மையா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 2

எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி
முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொ ழுகும்வெள் ளருவி யையா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 3

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலு மையா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 4

ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 5

தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 6

(7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிமதிக் கண்ணியி ஞனைக் காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்
அடியிணை யார்க்குங் கழலா னையா றடைகின்ற போது
இடிகுர லன்னதொ ரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 7

விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளோடும் பாடி
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்து மையா றடைகின்ற போது
கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 8

முற்பிறைக் கண்ணியி ஞனை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் ருரோ டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 9

திங்கண் மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளொடும் பாடி
எங்கரு ணல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்ன வருவேன்
அங்கிள மங்கைய ராடு மையா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன சண்டேன் 10

வளர்மதிக் கண்ணியி ஞனை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன் 11

திருச்சிற்றம்பலம்

பொது

## தனித் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

ஆளா னார்க்கா ளானாரை யடைந்துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. 3

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 4

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர னாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே. 5

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 6

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே. 7

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. 8

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பவ ரவர்தம்மை நாணியே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவதிகைவீரட்டானம்

### பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும், வளரும் பவள நிறமும்,
அண்ணல் அரண் முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 1

பூண்டதொர் கேழ லெயிறும் பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர் போலவெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்தகட் டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 2

ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 3

மடமான் மறிபொற்கலையு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா றழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 4

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப்ப டாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 6

கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 7

ஆடல் புரிந்த நிலையு மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 8

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 9

நரம்பெழு கைகள் பிடித்து நங்கைநடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னென்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொனறு மில்லை யஞ்ச வருவது மில்லை. 10

திருச்சிற்றம்பலம்

பொது

## நமச்சிவாயத்திருப்பதிகம்

### பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. 2

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலை நமச்சி வாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னுடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினு ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினு ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேனோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேனுடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணுத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைத்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

## திருக்கச்சியேகம்பம்

### பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 1

தேனோக்குங் கிளிமழலை யுமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 2

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே. 3

அண்டமா யாதியா யருமறையொ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கொர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத்தே வைத்தேனே. 4

ஆறேறு சடையானை யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 5

தேசனைத் தேசங்க டொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைக ளுகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளியா காசமாம்
ஈசனை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லானை நல்லான நான்மறையொ டாறங்கம்
வல்லானை வல்லார்கண் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 7

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்றும்
எரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 8

ஆகம்பந் தரவணையா னயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணுண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோது மிறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை யென்மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

## திருப்பைஞ்ஞீலி

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை யவலமே. 1

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ரரய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 2

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருட் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிட மேத்துபைஞ் ஞீலியுள்
என்று மேவி யிருந்த வடிகளே. 4

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனர்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தானைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த வடிகளே. 5

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
அண்ட வாண னடியடைந் துய்ந்தனே. 6

வரிப்பை யாடர வாட்டி மதகரி
உரிப்பை மூடிய வுத்தம னுருறை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. 7

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த வடிகளே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரினன்
வாரு லாமுலை மங்கையொர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. 9

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட வருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகலூர்

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுக்கே னென்சொல்லி யெண்ணு கேனோ
 யெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
 கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
 யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டா யன லாடினா
 யாதிரையா யானிழலா யானே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
 பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
 சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்
 றிருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
 பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
 மான்மறிகை யேந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையு மென்மேற் றர வறுத்தா
 யவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
 சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
 மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி யாதியாய் வேத மாகி
 யலர்மேலா னீர்மேலா னாய்ந்துங் காணாப்
பொருளாவா யுன்னடிக்கே போது கின்றேன்
 பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரேறு செஞ்சடைமே னிலாவெண் டிங்க
ணீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்கர்ட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்க ளெரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டான மேயாய்
மருவினியார் மளத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவரார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவாரார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
பொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியே னிட்டுக் கூறி நின்று
கொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்ருய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பு நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே யாதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையு மல்லா துணரா துள்ள
முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மே லேவி
யில்லாத தரவறுத்தாய்க் கில்லே னேலக்
கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

## திருவெண்ணெய்நல்லூர்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. 3

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணுர்மதி சூடீதழல் போலுந்திரு மேனி
எண்ணுர்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணுர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணுவுனக் காளாயினி யல்லேனென லாமே. 6

ஊனுயுயி ரானுயுட லானுயுல கானுய்
வானுய்நில னுய்கட லானுய்மலை யானுய்
தேனுர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனுயுனக் காளாயினி யல்லேனென லாமே. 7

ஏற்ருர்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்ருதன சொல்லித்திரி வேனேசெக்கர் வானீர்
ஏற்ருய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்ருயுனக் காளாயினி யல்லேனென லாமே. 8

மழுவாள்வல னேந்திமறை யோதிமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 9

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுரையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

## திருத்துறையூர்

### பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
கலையா ரல்குற் கன்னியரா டுந்துறையூர்த்
தலைவா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 1

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தங் கமழ்கா ரகில்சந் தனமுந்திச்
செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால்
மந்தி பலமா நடமா டுந்துறையூர்
எந்தா யுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 3

அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச்
சுரும்பாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
கரும்பார் மொழிக்கன் னியராடுந் துறையூர்
விரும்பா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 4

பாடார்ந் தனமாவும் பலாக்களுஞ் சாடி
நாடார வந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
மாடார்ந் தனமா ளிகைசூழுந் துறையூர்
வேடா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 5

மட்டார் மலர்க்கொன் றையும்வன்னி யுஞ்சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
கொட்டாட் டொடுபாட் டொலியோவாத் துறையூர்ச்
சிட்டா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 6

மாதார் மயிற்பீ லியும்வெண் ணுரையுந்தித்
தாதாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
போதார்ந் தனபொய் கைகள்சூழுந் துறையூர்
நாதா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 7

கொய்யா மலர்க்கோங் கொடுவேங் கையுஞ்சாடிச்
செய்யாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
மையார் தடங்கண் ணியராடுந் துறையூர்
ஐயா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 8

விண்ணார்ந் தனமே கங்கணின் றுபொழிய
மண்ணாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப்பா வையர்ஆடுந் துறையூர்
அண்ணா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 9

மாவாய்ப் பிளந்தானு மலர்மிசை யானும்
ஆவா வவர்தேடித் திரிந்தல மந்தார்
பூவார்ந் தனபொய் கைகள்சூழுந் துறையூர்த்
தேவா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யார் கமலம் மலர்நாவ லூர்மன்னன்
கையாற் றெழுதேத்தப் படுந்துறை யூர்மேல்
பொய்யாத் தமிழூர னுரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்க டவநெறி தானே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவதிகைத்திருவீரட்டானம்

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற வறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 1

முன்னெயெம் பெருமானை மறத்தென்கொன் மறவா
தொழிந்தென்கொன் மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னெயென் னத்தாவென் றமரரா லமரப்
படுவானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னேயென் னெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 2

விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்துங்
கரும்பேயென் கட்டியென் றுள்ளத்தா லுள்கிக்
காதல்சேர் மாதரள் கங்கையா ணங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவு முடன்றுயில வைத்தருளு மெந்தை
இருங்புனல்வந் தெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றானத் தொருவனை நானுய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
றலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை யம்மானை யெம்மான்
றம்மானை யாவர்க்கு மறிவரிய செங்கண்
ஏற்றானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 4

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவு
முடையானை யதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தருழ் புனன்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 5

மைம்மான மணிநீல கண்டத்தெம் பெருமான்
வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்புந்
தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற
வெம்மான மதகரியி னுரியானை வேத
விதியானை வெண்ணீறு சண்ணித்த மேனி
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 6

வெய்தாய வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு
மிகவிரங்கி யருள்புரிந்து வீடுபே றாக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்
தெண்டோளெம் பெருமானைப் பெண்பாக மொருபால்
செய்தானைச் செக்கர்வா னொளியானைத் தீவா
யரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 7

பொன்னானை மயிலூர்தி முருகவேள் றாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வா னந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னானை யமரர்கடம் பெருமானைக் கருமா
 னுரியானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறிகெடில வடவீரட் டானத்
 துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 8

திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
 சிலைவளைவித் தொருகணையாற் றொழில்பூண்ட சிவனைக்
கருந்தாள மதக்களிற்றி னுரியானைப் பெரிய
 கண்மூன்று முடையானைக் கருதாத வரக்கன்
பெருந்தோள்க ளலைந்து மீரைந்து முடியு
 முடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை யெறிகெடில வடவீரட் டானத்
 துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 9

என்பினையே கலனாக வணிந்தானை யெங்க
 ளெருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன்
வன்வனைய வளர்பொழில்சூழ் வயனாவ லூர்க்கோன்
 வள்றொண்ட னாரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
 பெருமானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்பொன்னை யெறிகெடில் வடவீரட் டானத்
 துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவாரூர்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரையுங்கடலு மலையுங் காலையுமாலையு மெல்லாம்
உரையில்விரவி வருவா னொருவனுருத்திர லோகன்
வரையின்மடமகள் கேள்வன் வானவர்தானவர்க்கெல்லாம்
அரையனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 1

தனியனென்றெள்கி யறியேன் றம்மைப்பெரிது முகப்பன்
முனிபவர்தம்மை முனிவன் முகம்பலபேசி மொழியேன்
கனிகள்பலவுடைச் சோலைக் காய்க்குலையீன்ற கமுகின்
இனியனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற்குலாவன்றிச் சொல்லேன் றொடர்ந்தவர்க்குந்துணை
யல்லேன்

கல்லில்வலிய மனத்தேன் கற்றபெரும்புல வாணர்
அல்லல்பெரிது மறுப்பா னருமறையாறங்க மோதும்
எல்லையிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 3

நெறியுமறிவுஞ் செறிவு நீதியுநான்மிகப் பொல்லேன்
மிறையுந்தறியு முகப்பன் வேண்டிற்றுச்செய்து திரிவன்
பிறையுமரவும் புனலும் பிறங்கியசெஞ்சடை வைத்த
இறைவனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 4

நீதியிலொன்றும் வழுவே னிட்கண்டகஞ்செய்து வாழ்வேன்
வேதியர்தம்மை வெகுளேன் வெகுண்டவர்க்குந்துணை யாகேன்
சோதியிற்சோதியெம் மானைச் சுண்ணவெண்ணீறணிந் திட்ட
ஆதியிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 5

அருத்தம்பெரிது முகப்ப னல்லலையேனலந் தார்கள்
ஒருத்தர்க்குதவியே னல்லே னுற்றவர்க்குந்துணை யல்லேன்
பொருத்தமேலொன்று மிலாதேன் புற்றெடுத்திட்டிடங் கொண்ட
அத்தனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 6

சந்தம்பலவறுக் கில்லேன் சார்ந்தவர்தம்மடிச் சாரேன்
முந்திப்பொருவிடை யேறி மூவுலகுந்திரி வானே
கந்தங்கமழ்கொன்றை மாலைக் கண்ணியன்விண்ணவ ரேத்தும்
எந்தையிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 7

நெண்டிக் கொண்டேயுங் கிலாய்ப்ப னிச்சயமேயிது திண்ணம்
மிண்டர்க்குமிண்டலாற் பேசேன் மெய்ப்பொருளன்றி யுணரேன்
பண்டங்கிலங்கையர் கோனைப் பருவரைக்கீழடர்த் திட்ட
அண்டனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர் 8

நமர்பிறரென்ப தறியே னான்கண்டதேகண்டு வாழ்வேன்
தமரம்பெரிது முகப்பன் றக்கவாறென்று மிலாதேன்
குமரன்றிருமால் பிரமன் கூடியதேவர் வணங்கும்
அமரனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 9

ஆசைபலவறுக் கில்லே னாரையுமன்றி யுரைப்பேன்
பேசிற்சழக்கலாற் பேசேன் பிழைப்புடை யேன்மனந் தன்னால்
ஓசைபெரிது முகப்பா னொலிகடனஞ்சமு துண்ட
ஈசனிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ கேளீர். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையிருப்பது மாரூ ரவரெம்மையுமாள்வரோ வென்று
சிந்தைசெயுந்திறம் வல்லான் றிருமருவுந்திர டோளன்
மந்தமுழவ மியம்பும் வளவயனுவலா ரூரன்
சந்தமிசையொடும் வல்லார் தாம்புகழெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கோளிலி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீளநினைந்தடி யேனுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெரு மானவையட்டித் தரப்பணியே. 1

வண்டமருங்குழ லாளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புர மூன்றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவ னேயவையட்டித் தரப்பணியே. 2

பாதியொர்பெண்ணைவைத் தாய்படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத் தமதுநீயும றிதியன்றே
கோதில்பொழில்புடை சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆதியேயற்புத னேயவையட்டித் தரப்பணியே. 3

சொல்லுவதென்னுனை நான்றெண்டைவாயுமை நங்கையைநீ
புல்கியிடத்தில்வைத் தாய்க்கொருபூசல்செய் தாருளரோ
கொல்லைவளம்புற விற்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 4

முல்லைமுறுவ லுமையொருபங்குடை முக்கணனே
பல்லயர்வெண்டலை யிற்பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 5

குரவமருங்குழ லாளுமைநங்கையொர் பங்குடையாய்
பரவைபசிவருத் தமதுநீயும றிதியன்றே
குரவமரும்பொழில் சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவமசைத்தவ னேயவையட்டித் தரப்பணியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானுனை யேநினைந்தேத்துவ னெப்பொழுதும்
வம்பமருங்குழ லாளொருபாக மமர்ந்தவனே
செம்பொனின்மாளிகை சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அன்பதுவாயடி யேற்கவையட்டித் தரப்பணியே. 7

அரக்கன் முடிகரங் களடர்த்திட்டவெம் மாதிப்பிரான்
பரக்குமரவல்கு லாள்பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள்குதி கொள்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கமதாயடி யேற்கவையட்டித் தரப்பணியே. 8

பண்டையமால்பிர மன்பறந்தும்மிடந் தும்மயர்ந்தும்
கண்டிலராயவர் கள்கழல்காண்பரி தாயபிரான்
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவனே யவையட்டித் தரப்பணியே. 9

கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி மேயவனை
நல்லவர்தாம்பர வுந்திருநாவல வூரனவன்
நெல்லிடவாட்கள்வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகி னண்டர்வானுல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

## திருமுதுகுன்றம்

### பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்செய்தமேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலும் மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள் பரவையிவடன் முகப்பே
என்செய்தவாறடிகே ளடியேனிட் டளங்கெடவே. 1

உம்பரும்வானவரும் முடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத்தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெருமானருளீ ரடியேனிட் டளங்கெடவே. 2

பத்தாபத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தாமுக்கணனே முதுகுன்ற மமர்ந்தவனே
மைத்தாருந்தடங்கண் பரவையிவள் வாடாமே
அத்தாதந்தருளா யடியேனிட் டளங்கெடவே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையொர்கூறமர்ந்தீர் மறைநான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திகழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள்பரவை குணங்கொண்டிருந் தாண்முகப்பே
அங்கணனேயருளா யடியேனிட் டளங்கெடவே. 4

மையாரும்மிடற்ருய் மருவார்புர மூன்றெரித்த
செய்யார்மேனியனே திகழும்முது குன்றமர்ந்தாய்
பையாரும்மரவே ரல்குலாளிவள் வாடுகின்ருள்
ஐயாதந்தருளா யடியேனிட் டளங்கெடவே. 5

நெடியானுன்முகனு மிரவியொடு மிந்திரனும்
முடியால்வந்திறைஞ்ச முதுகுன்ற மமர்ந்தவனே
படியாரும்மியலாள் பரவையிவ டன்முகப்பே
யடிகேடந்தருளீ ரடியேனிட் டளங்கெடவே. 6

கொந்தணவும்பொழில்சூழ் குளிர்மாமதின் மாளிகைமேல்
வந்தணவும்மதிசேர் சடைமாமுது குன்றுடையாய்
பந்தணவும்விரலாள் பரவையிவ டன்முகப்பே
அந்தணனேயருளா யடியேனிட் டளங்கெடவே. 7

பரசாருங்கரவா பதினென் கணமுஞ்சூழ
முரசார்வந்ததிர முதுகுன்ற மமர்ந்தவனே
விரைசேருங்குழலாள் பரவையிவ டன்முகப்பே
அரசேதந்தருளா யடியேனிட் டளங்கெடவே. 8

ஏத்தாதிருந்தறியே னிமையோர்தனி நாயகனே
மூத்தாயுலகுக்கெல்லா முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள் பரவையிவ டன் முகப்பே
கூத்தாதந்தருளாய் கொடியேனிட் டளங்கெடவே. 9

பிறையாருஞ்சடையெம் பெருமானரு ளாயென்று
முறையால்வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார்தங்குரிசில் வயல்நாவால ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ்சிவ லோகமதே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர்

## பண் - தக்கேசி

### திருச்சிற்றம்பலம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணு
வெம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 1

கட்ட மும்பிணி யுங்களை வானைக்
காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களை வானை
விரவி னுல்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை
வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை
யாரூ ரானை மறக்கலு மாமே. 2

கார்க்கின் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெ லாம்பொரு ளாயுடன் கூடிப்
பார்க்கின் றவுயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலு மாகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
யுணரு நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகடலைமலை தன்னை
யாரூ ரானை மறக்கலு மாமே. 3

செத்த போதினின் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தையுண் டேமன முண்டே
மதியுண் டேவிதி யின்பய னுண்டே
முத்த னெங்கள்பி ரானென்று வானோர்
தொழநின் றதிமி லேறுடை யானை
அத்த னெந்தைபி ரானெம்பி ரானை
யாரூ ரானை மறக்கலு மாமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவுண் டேன்மனத் தாற்றெளி வுண்டேற்
றேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
மறிவுண் டேன்மறு மைப்பிறப் புண்டேல்
வாளுண் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்
பொறிவண் டியாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
அறிவுண் டேயுட லத்துயி ருண்டே
யாரூ ரானை மறக்கலு மாமே. 5

பொள்ள லிவ்வுட லைப்பொரு ளென்று
பொருளுஞ் சுற்றமும் போகமு மாகி
மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம்
வாரா மேதவிர்க் கும்விதி யானை
வள்ள லெந்தமக் கேதுணை யென்று
நாளு ளுமம ரர்தொழு தேத்தும்
அள்ள லங்கழ னிப்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 6

கரியா னையுரி கொண்டகை யானைக்
கண்ணின் மேலொரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தங்களை வானை
மறையா னைக்குறை மாமதி சூடற்
குரியா னையுல கத்துயிர்க் கெல்லா
மொளியா னையுகந் துள்கிநண் ணுதார்க்
கரியா னையடி யேற்கெளி யானை
யாரூ ரானை மறக்கலு மாமே. 7

வாளா நின்று தொழுமடி யார்கள்
வாழு ளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாளு ளும்மல ரிட்டுவ ணங்கார்
நம்மையாள் கின்ற தன்மையை யோரார்
கேளா நான்கிடந் தேயுழைக் கின்றேன்
கிளைக்கெ லாந்துணை யாமெனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றே
ஞரூ ரானை மறக்கலு மாமே. 8

விடக்கை யேபெருக் கிப்பல நாளும்
வேட்கை யாற்பட்ட வேதனை தன்னைக்
கடக்கி லேனெறி காணவு மாட்டேன்
கண்கு ழிந்திரப் பார்வையி லொன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச்
சடையா னையுமை யாளையோர் பாகத்
தடக்கி னானையந் தாமரைப் பொய்கை
யாரூ ரானை மறக்கலு மாமே. 9

ஒட்டி யாட்கொண்டு போயொளித் திட்ட
வுச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிரு டன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்ட னைச்செல்வ
வாரூ ரானை மறக்கலு மாமே. 10

ஓரு ரென்றுல கங்களுக் கெல்லா
முரைக்க லாம்பொரு ளாயுடன் கூடிக்
காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலை
முடியன் காரிகை காரண மாக
ஆரூ ரைம்மறத் தற்கரி யானை
யம்மான் றன்றிருப் பேர்கொண்ட தொண்டன்
ஆரூ ரன்னடி நாயுரை வல்லா
ரமர லோகத் திருப்பவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்குருகாவூர்வெள்ளடை

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

இத்தனையா மாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 1

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறுங்
காவியுங் குவளையுங் கமலஞ்செங் கழுநீரும்
மேவிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனுக வுண்பலிக் குழல்வானே
காடுநின் னிடமாகக் கடுவிரு ணடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 3

வெப்பொடு பிணியெல்லாந் தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
ஒப்புடை யொளிநீல மோங்கிய மலர்ப்பொய்கை
அப்படி யழகாய வணிநடை மடவன்னம்
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 4

வரும்பழி வாராமே தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
சுரும்புடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண் ணீற்றுனே
அரும்புடை மலர்ப்பொய்கை யல்லியு மல்லிகையும்
விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 5

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 6

போந்தனை தரியாமே நமன்றமர் புகுந்தென்னை
நோந்தனை செய்தாலு நுன்னல தறியேனுன்
சாந்தனை வருமேலுந் தவிர்த்தென்னை யாட்கொண்ட
வேந்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 7

மலக்கினின் னடியார்கள் மனத்திடை மாறீர்ப்பாய்
சலச்சல மிடுக்குடைய தருமனுர் தமரென்னைக்
கலக்குவான் வந்தாலுங் கடுந்துயர் வாராமே
விலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 8

படுவிப்பா யுனக்கேயாட் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் றோலுடைத் துழல்வானே
கெடுவிப்பா யல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 9

வளங்கனி பொழின்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுன்றவானை
இளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெண்பாக்கம்

### பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையா னுள்ளிருந்து வுளோம்போகீ ரென்றானே. 1

இடையறியேன் றலையறியே னெம்பெருமான் சரணமென்பேன்
நடையுடைய னம்மடியா னென்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்றோல்
உடையுடையா னெனையுடையா னுளோம்போகீ ரென்றானே. 2

செய்வினையொன் றறியாதேன் றிருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா விங்கிருந்தா யோவென்னப் பரிந்தென்னை
உய்யவருள் செய்யவல்லா னுளோம்போகீ ரென்றானே. 3

கம்பமருங் கரியுரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனாகி
நம்பியிங்கே யிருந்தீரே யென்றுநான் கேட்டலுமே
உம்பர்தனித் துணையெனக்கு வுளோம்போகீ ரென்றானே. 4

பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடைமேற் பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமா வெருதேறி
துன்னியிரு பாலடியார் தொழுதேத்த வடியேனும்
உன்னமதாய்க் கேட்டலுமே யுளோம்போகீ ரென்றானே. 5

கண்ணுதலார் காமனையுங் காய்ந்ததிறற் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேற் றீமலர்ந்த கொன்றையினான்
கண்மணியை மறைப்பித்தா யிங்கிருந்தா யோவென்ன
ஒண்ணுதலி பெருமானா ருளோம்போகீ ரென்றானே. 6

பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீ ரிங்கிருந்தீ ரேயென்ன
ஊரரவ மரைக்கசைத்தா னுளோம்போகீ ரென்றானே. 7

வாரிடங்கொள் வனமுலையா டன்னோடு மயானத்துப்
பாரிடங்கள் பலசூழப் பயின்றாடும் பரமேட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிடங்கொள் கண்டத்தன் கருதுமிடந் திருவொற்றி
ஊரிடங்கொண் டிருந்தபிரா னுளோம்போகீ ரென்றானே. 8

பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
சொன்னவெனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே யிங்கிருந்தா யோவென்ன
ஒன்னலரைக் கண்டார்போ லுளோம்போகீ ரென்றானே. 9

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே. 10

ஏராரும் பொழிலிலவு வெண்பாக்க மிடங்கொண்ட
காராரு மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடும்
சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் றமில்வல்லார்க் கடையாவல் வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கச்சியேகம்பம்

### பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
யாதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெரு மானை
யூர்வ தொன்றுடை யானும்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பரவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாளுமை நங்கை
யாத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியு முப்புரந் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியி னீருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு வொன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை
அல்ல றீர்த்தருள் செய்யவல் லானை
யரும றையவை யங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 5

திங்க டங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாமவேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
'மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 6

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்று நல்லவன் றன்னை
நாளு நாமுகக் கின்றபி ரானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி ரெல்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்று நினைந்தெழு வார்கள்
சிந்தை யிற்றிக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடா னஞ்சு மாட்டுகந் தானை
அந்த மில்புக ழாளுமை நங்கை
யாத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுர மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாளுமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்க ளெட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 9

எள்க லின்றி யிமையவர் கோனை
யீச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி யுகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவியோ டித்தழு வவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 10

பெற்ற மேறுகந் தேறவல் லானைப்
பெரிய வெம்பெரு மானென்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தனெம் மானைக்
குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன்
நற்ற மிழிவை யீரைந்தும் வல்லார்
நன்னெ றியுல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாரூர்

### பண் - செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வ ழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் றரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றின் முட்டா தடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்று முட்டாப் பாடுமடியார் தங்கண் காணுது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி யுறைவீர் பழனம் பதியார் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே யுடையீர் மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய வடியார் தங்க ளல்லல் சொனனக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை யிதுவோ திருவாரூர்
எந்த ம்டிகே ளிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் மடியார் தங்கண் காணுது
வந்தெம் பெருமான் முறையோ வென்றல் வாழ்ந்துபோதீரே. 5

தினைத்தா ளன்ன செங்கா ணுரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போன் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து தங்கண் காணுது
மனத்தால் வாடி யடியா ரிருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை யடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
ஏயெம் பெருமா னிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனுய் நிலனுய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்
பழிதா னுவ தறியீ ரடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணு தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயோ டேனும் பிறிவொன் றின்று தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றே கருதிக் கொண்டக்கால்.
நாய்தான் போல நடுவே திரிந்து முமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் றிறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை யிதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டானம்மே யிடமாக் கொண்டீரே
இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்டோண் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய வென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவையாறு

### பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பரவும்பரிசொன் றறியேனான் பண்டேயும்மைப் பயிலாதேன்
இரவும்பகலு நினைந்தாலு மெய்தநினைய மாட்டேனான்
சுரவிலருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 1

எங்கேபோவே னாயிடினு மங்கேவந்தென் மனத்தீராய்ச்
சங்கையொன்று மின்றியே தலைநாள்கடைநா ளொக்கவே
கங்கைசடைமேற் கரந்தானே கலைமான்மறியுங் கனன்மழுவும்
தங்குத்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 2

மருவிப்பிரிய மாட்டேனான் வழிநின்றொழிந்தே னொழிகிலேன்
பருவிவிச்சி மலைச்சாரற் பட்டைகொண்டு பகடாடிக்
குருவியோப்பிக் கிளிகடிவார் குழன்மேன்மாலை கொண்டோட்டத்
தரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 3

பழகாநின்று பணிசெய்வார் பெற்றபயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு வேகபடமொன்றரைச்சார்த்தி
குழகாவாழைக் குலைத்தெங்கு கொணர்ந்துகரைமே லெறியவே
அழகார்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைத்தபிழையொன் றறியேனுன் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கணல்லார் குடைந்தாட மலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங் கலந்தெங்குங் கழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 5

கார்க்கொள்கொன்றை சடைமேலொன் றுடையாய்விடையாய்
கையினுன்
மூர்க்கர்புரமூன் றெரிசெய்தாய் முன்னீபின்னீ முதல்வனீ
வார்க்கொளருவிபலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 6

மலைக்கண்மடவா ளொருபாலாய்ப் பற்றியுலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையா லெயிலெய்த செங்கண்விடையாய் தீர்த்தனீ
மலைக்கொளருவி பலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 7

போழுமதியும் புனக்கொன்றை புனல்சேர்சென்னிப் புண்ணியா
சூழுமரவச் சுடர்ச்சோதீ யுன்னைத்தொழுவார் துயர்போக
வாழுமவர்க ளங்கங்கே வைத்தசிந்தை யுய்த்தாட்ட
ஆழுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 8

கதிர்க்கொள்பசியே யொத்தேநான் கண்டேனும்மைக் காணுதேன்
எதிர்த்துநீந்த மாட்டேனு னெம்மான்றம்மான் றம்மானே
விதிர்த்துமேக மழைபொழிய வெள்ளம்பரந்து நுரைசிதறி
அதிர்க்குந்திரைக் காவிரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 9

கூசியடியா ரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீர்
தேசவேந்தன் றிருமாலு மலர்மேலயனுங் காண்கிலாந்
தேசமெங்குந் தெளித்தாடத் தெண்ணீ ரருவிகொணர்ந் தெங்கும்
வாசந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 10

கூடியடியா ரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீர்
ஊடியிருந்து முணர்கிலே னும்மைத்தொண்ட னூரனேன்.
தேடியெங்குங் காண்கிலேன் றிருவாரூரே சிந்திப்பன்
ஆடுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்

(11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டத்தொகை

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயர்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 2

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
ஞொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 4

வம்பறு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டாங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யனடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவ ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகலூர்

### பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்பெரி துடையனேகற்று
நல்லனேசுற்ற நற்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று
பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 3

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துட
ணடுங்கிநிற்குமிக் கிழவனை
வரைகள்போற்றிர டோளனே யென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்ளேறுடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையனுயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியையவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
நெஞ்சிருேயறுத் துஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்று
நரைத்தமாந்தரை யிளையனே
குலமிலாதரனைக் குலவனேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந் தோளனேயென்று
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றேபுல வோர்க்கெலாமென்று
சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன்றுகண் குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போ யண்டமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலு
மீக்குமீகில னாகிலும்
வள்ளலேயெங்கண் மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று
மொழியினுங்கொடுப் பாரிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்திலாந்தைகள் பாட்டருப்புக
ஊரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனுயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

தையலாருக்கொர் காமனேயென்றுஞ்
சாலநல்வழக் குடையனே
கையுலாவிய வேலனேனென்று
கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கையாவியின் மேதிபாய்புக
ஊரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனுயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங் கமலமோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழி லுவலூரன்வ
னப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனூரடி சென்றுசேர்வதற்
கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

## திருப்பாண்டிக்கொடுமுடி நமச்சிவாயத்திருப்பதிகம்

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சிவாயவே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டனும்மடி யேத்துவாரிகழ்ந்
திட்டநாண்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 2

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 3

எல்லையில்புக ழெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 4

அஞ்சினார்க்கர ணாதியென்றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு
ணல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 5

ஏடுவானிளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்கசைத்த
வழகனேயந்தண் காவிரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 6

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 7

செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக
மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 8

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்றொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே. 9

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புக்கொளியூர் அவிநாசி

### பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
உற்றாயென் றுன்னையே யுள்குகின் றேனுணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே. 1

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ
ஒழிவ தழகோ சொல்லா யருளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணி யென்னைக்கிறி செய்ததே. 2

எங்கேனும் போகினு மெம்பெரு மானை நினைந்தக்கால்
கொங்கே புகினுங் கூறைகொண் டாறலைப் பாரிலை
பொங்கா டரவா புக்கொளி யூரவி நாசியே
எங்கோ னேயுனை வேண்டிக்கொள் வேன்பிற வாமையே. 3

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே. 4

அரங்காவ தெல்லா மாயிடு காடது வன்றியும்
சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற் சந்தித்துப்
புரங்கோட டெய்தாய் புக்கொளி யூரவி நாசியே
குரங்காடு சோலைக் கோயில்கொண் டகுழைக் காதனே. 5

நாத்தானு முனைப்பாட லன்றி நவிலா தெனாச்
சோத்தென்று தேவர் தொழ நின்ற சுந்தரச் சோதியாய்
பூத்தாழ் சடையாய் புக்கொளி யூரவி நாசியே
கூத்தா வுனக்குநா னாட்பட்ட குற்றமுங் குற்றமே. 6

மந்தி கடுவனுக் குண்பழ நாடி மலைப்புறம்
சந்திக டோறுஞ் சலபுட்ப மிட்டு வழிபடப்
புந்தி யுறைவாய் புக்கொளி யூரவி நாசியே
நந்தி யுனைவேண்டிக் கொள்வே னரகம் புகாமையே. 7

பேணா தொழிந்தே னுன்னை யலாற்பிற தேவரைக்
காணா தொழிந்தேன் காட்டுதி யேலின்னங் காண்பனான்
பூணா ணரவா புக்கொளி யூரவி நாசியே
காணாத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளாறு தெள்ளா றரத்துறை வாயெங்க ணம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் றோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணியென் னைக்கிறி செய்ததே. 9

நீரேற வேறு நிமிர்புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி யூரவி நாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டனா ரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

## திருநொடித்தான்மாலை

### பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்க்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தா னொடித்தான்மலை யுத்தமனே. 1

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை யருள்புரிந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 2

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களாற் றுரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பி லழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே. 3

வாழ்வை யுகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தவென்னை யதுமாற்றி யமரரெல்லாம்
சூழ வருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழ மருள்புரிந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுத றொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான்மலை யுத்தமனே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சிளே யொன்றிநின்று வலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனே யென்மனமே வைகிவானநன் ஞடர்முன்னே
துஞ்சுதன் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின வானைதந்தா ஞெடித்தான்மலை யுத்தமனே. 6

நிலைகெட விண்ணதிர நிலமெங்கு மதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் னலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ண நொடித்தான்மலை யுத்தமனே. 7

அரவொலி யாகமங்க ளறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தா ஞெடித்தான்மலை யுத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மதயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென வெம்பெருமான்
நந்தம ரூரனென்ரு ஞெடித்தான்மலை யுத்தமனே. 9

ஊழிதொ றூழிமுற்று முயர்பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்றமிழா லிசைந்தேத்திய பத்திணையும்
ஆழி கடலரையா வஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகன்பூண்டி

### பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்கூறைகொண்
டாறலைக் குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்
முருகன்பூண்டிமா நகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடு
மெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 1

வில்லைக்காட்டி வெருட்டிவேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினுலெறிந் திட்டுமோதியுங்
கூறைகொள் ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ்
முருகன்பூண்டிமா நகர்வாய்
எல்லைகாப்பதொன் றில்லையாகிநீ
ரெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 2

பசுக்களேகொன்று தின்றுபாவிகள்
பாவமொன் றறியார்
உயிர்க்கொலைபல நேர்ந்துநாடொறுங்
கூறைகொள் ளுமிடம்
முசுக்கள்போற்பல வேடர்வாழ்
முருகன்பூண்டிமா நகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங்கொண்டுநீ
ரெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 3

பீறற்கூறையு டுத்தொர்பத்திரங்
கட்டிவெட்டனராய்ச்
சூறைப்பங்கிய ராகிநாடொறுங்
கூறைகொள் ளுமிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோறைறவேடுவர் கூடிவாழ்
முருகன்பூண்டிமா நகர்வாய்
ஏறுகாலிற்ற தில்லையாய்விடி
லெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 4

தயங்குதோலை யுடுத்தசங்கரா
சாமவேத மோதி
மயங்கியூரிடு பிச்சைகொண்டுணு
மார்க்கமொன் றறியீர்
முயங்குபூண்முலை மங்கையாளொடு
முருகன்பூண்டிமா நகர்வாய்
இயங்கவும்மிடுக் குடையராய்விடி
லெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 5

விட்டிசைப்பன கொக்கரைகொடு
கொட்டிதத் தளகம்
கொட்டிப்பாடுமித் துந்துமியொடு
குடமுழாநீர் மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ்
முருகன்பூண்டிமா நகர்வாய்
இட்டபிச்சைகொண் டுண்பதாகினீ
ரெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 6

வேதமோதிவெண் ணீறுபூசிவெண்
கோவணந்தற் றயலே
ஓதமேவிய வொற்றியூரையு
முத்திரநீர் மகிழ்வீர்
மோதிவேடுவர் கூறைகொள்ளு
முருகன்பூண்டிமா நகர்வாய்
ஏதுகாரண மேதுகாவல்கொண்
டெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 7

படவரவு நுண்ணேரிடைப்
பணைத்தோள்வரி நெடுங்கண்
மடவரல்லுமை நங்கைதன்னையொர்
பாகம்வைத் துகந்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடவரல்லீ ரிடரிலீர்
முருகன்பூண்டிமா நகர்வாய்
இடவமேறியும் போவதாகினீ
ரெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 8

சாந்தமாகவெண் ணீறுபூசிவெண்
பற்றலை கலனு
வேய்ந்தவெண்பிறைக் கண்ணிதன்னையொர்
பாகம்வைத் துகந்தீர்
மோந்தையோடு முழக்கரு
முருகன்பூண்டிமா நகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கைதன்னோடு
மெத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே. 9

முந்திவானவர் தாந்தொழு
முருகன்பூண்டிமா நகர்வாய்ப்
பந்தணைவிரற் பாவைதன்னையொர்
பாகம்வைத் தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூர
னுரைத்தனபத் துங்கொண்
டெந்தம்மடிகளே யேத்துவாரிட
ரொன்றுந்தா மிலரே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருநாவுக்கரசு சுவாமிகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அவர்கள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகத் தொகுப்பு

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியிடை யாய்எனை! உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 1

அருணன்இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ; நயனக்
கடிமலர் மலர! மற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன; இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே! பள்ளி எழுந்தரு ளாயே! 2

கூவின பூங்குயில் கூவின கோழி,
குருகுகள் இயம்பின: இயம்பின சங்கம்:
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்! எமக் கெளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்.
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்.
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் [டு] இன்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்க டோறுநின் றுய், எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னு!
சிந்தனைக் கும்அரி யாய்! எங்கண் முன்வந் (து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே! 5

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றுர், அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே! 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்!
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னு!
எதுஎமைப் பணிகொளும் ஆ[று]? அது கேட்போம்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 7

முந்திய மிதல்நடு இறுதியும் ஆனுய்
மூவரும் அறிகிலர் யாவர்மற்று அறிவார்?
பந்தணை விரலியும், நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே! 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தே! கரும் பே! விரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான் ! பள்ளி எழுந்தரு ளாயே ! 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய் ! திரு மாலாம்

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே ! பள்ளி எழுந்தரு ளாயே ! 10

சிவமயம்

# திருவெம்பாவை

(சக்தியை வியந்து — மாணிக்கவாசக சுவாமிகள்
திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியே வன்செவியோ நின்செவிதான் ?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே !
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய் ! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் ? நேரிழையீர் !
சீசி இவையும் சிலவோ ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் ? 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் பழ அடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை ?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் ! 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் ! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏழக் குழலி பரிசேலோர் எம்பாவாய் ! 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய் ! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சென்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் ! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் ! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் ! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ? ஏதவன்பேர் ? ஆருற்றார் ? ஆரயலார் ?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் ! 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையயார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமாமாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்

பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் ! 17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிப்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர்அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் ! 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் !

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க ! நாதன் தாள்வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில், நீங்காதான் தாள்வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகமம் ஆகிநின்று, அண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன், இறைவன் அடிவாழ்க !

வேகம் கெடுத்தாண்ட, வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன், பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன், பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும், கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும், சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி, எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி, சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும், மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை, நம் தேவன்அடிபோற்றி
ஆராத இன்பம், அருளும் மலைபோற்றி!
சிவன்அவன் என்சிந்தையுள். நின்ற அதனால்
அவன் அருளாலே, அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழ, சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும், ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக், கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா, எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து, மிக்காய், விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை, இலாதானே நின்பெருஞ்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப், புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப், பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப், பேயாய் கணங்களாய்
வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற, இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும், பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள், கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள், ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா, விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி, ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய், இயமானன் ஆம்விமலா
பொய்யாயின எல்லாம், போய்அகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன், இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை, அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி, இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை, புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய, நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு, நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள், தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும், எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான், வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய, மாய இருளை
அறம்பாவம் என்னும், அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும், புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது, வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும், வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்தஅன்பு ஆகிக், கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத, சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்த், கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த, தயாவான தத்துவனே
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார், அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப், பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற, பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து, ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி ஒன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும், இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே, தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும், புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச், சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின், வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத், தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார், அமுதே உடையானே
வேற்று விகார, விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா, அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக், கட்டழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம், பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி, அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச், சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின், பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிகீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிய

# அச்சோபதிகம்

## அனுபவ வழி அறியாமை

[கலி விருத்தம்]

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 1

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்(கு)
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே. 2

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 3

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 4

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே. 5

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்(து)
அந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 6

பையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 8

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 9



# திருச்சிற்றம்பலக் கோவையார்

## மாணிக்க வாசக சுவாமிகள் பாடியது

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள்
கொண்டு ஓங்கு தெய்வ
மருவளர் மாலையோர் வல்லியின்
ஒல்கி யன நடை வாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக்
கொடி போன்று ஒளிர்கின்றதே

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை
பாணரொக்கல்
சீரணி சிந்தாமணி யணிதில்லை
சிவனடிக்குத்
தாரணிகொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதி சேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்றி
யாவர்க்கும் ஊதியமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

---

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

---

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன்; மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே.

---

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலங் காரப் பாசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றனை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

---

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய்! மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

---

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

---

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

---

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர் !
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

---

திருமூலர் அருளிச் செய்த

# திருமந்திரம்

(பத்தாந் திருமுறை)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

---

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே.

---

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங்கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமுமாமே.

தேனுக்குள் இன்பஞ் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடு மதியிலீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற்பூதமே

மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ்
மூலனுரை செய்த முந்நூறு மந்திரம்
மூலனுரை செய்த முப்பதுபதேசம்
மூலனுரை செய்த மூன்றும் ஒன்றுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

---

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்வெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே.

---

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

---

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

என்றும் அடியவர் உள்ளத்
திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்
துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்
குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ
சிகாமணி பொன்னடியே.

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

காக்கக் கடவிய நீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வச் சேக்கிழார் அருளிச்செய்த பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாள தொழ.

எடுக்குமாக் கதையின் தமிழ்ச்செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருநாவுக்கரசு வளர்திருத் தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவலுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்.

சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்றொளியினில்
விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணம் ஒருமூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

சோதிமுத்தின் சிவிகை சூழ்வந்துபார்
மீதுதாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்
ருதியாரருளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினர் உய்ய உலகெலாம்

நன்மை பெருகருள் நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனூர் வணங்கி
மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்றவர் தஞ்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினன் சிவபெருமான்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு
நான்மகிழ்ந்துபாடி
அறவா ! நீ ஆடும்போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

என்றுமின்பம் பெருகுமியல் பினல்
ஒன்று காதலித்துள்ளமு மோங்கிட
மன்னுளாரடியார் அவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வவெண்டிரு நீறு சிறக்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

(விநாயகர் துதி)

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திரு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

இராகம் - காம்போதி

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

---

## திருச்செந்தூர் திருப்புகழ்

இராகம் - சிவரஞ்சனி

இயலிசையி லுசிதவஞ்சிக் கயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனதுள் அறியுமன்பைத் தருவாயே

மயில் தகர்கலிடையரந்தத் தினைகாவல்
வனசகுற மகளைவந்தித் தணைவோனே
கயிலைமலையனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவன் இளையகந்தப் பெருமாளே.

---

## (திருவாவினன்குடி) பழநி திருப்புகழ்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈதலும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

---

## சுவாமிமலை திருப்புகழ்

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிருவடியிணை யருள்வாயே
மறைபயிலரிதிரு மருகோனே
மருவலரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலைமருவிய பெருமாளே.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனததுடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தமலை முற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

---

## பழமுதிர்சோலை

இராகம் - பாவுகதாயினி

அகரமு மாகி யதிபனு மாகி
யதிகமு மாகி அகமாகி
அயனெனவாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பலவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானுட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானுட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

## வயலூர்

என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
என்னால் துதிக்கவுங் கண்களாலே
என்னா ழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னா லிருக்கவும் பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானார்
கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் தந்தகோவே
கல்லார் மனத்துடனில்லா மனத்தவ
கண்ணா டியிற்றடங் சண்ட வேலா
மன்னான தக்கனை துன்னாள் முடித்தலை
வன்வா ளியிற்கொளுந் தங்கரூபன்
மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
மன்னா முவர்க்கொரு தம்பிரானே.

## திருமயிலைத் திருப்புகழ்

அயிலொத்தெழுமிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே
சயிலத்தெழுதுணை முலையாலே
தடையுற்றடியனு மடிவேனோ
கயிலைப்பதியரன் முருகோனே
கடலக்கரைதிரை யருகேசூழ்
மயிலைப்பதிதனில் உறைவோனே
மகிமைக்கடியவர் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரத்நகிரி (வாட்போக்கி)**

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

# திருஅருட்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே—என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

---

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

---

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்தும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத்தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

---

வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன் அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இது தருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன் அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே.

---

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா தியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டுன்
உடல் உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே.

---

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால் தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை
அடித்ததுபோதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப் பாஇனி ஆற்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும் இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய் வந்து கவ்வி அந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும் ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என் இருகண் மணியே என் இன்பமே
மயில் ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

——

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

——

உளம் எனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை என்றனக் குற்றதுணை
உனை அன்றி வேறும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையன் அவ னுக்கருள வேண்டும் என் றுன்பால்
இசைக்கின்ற பேரும் இல்லை
ஏழையவ னுக்கருள்வ தேன் என்றுன் எதிர் நின்
றியம்புகின் றேரும் இல்லை.

---

திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள் கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்சருணை மயம்ஓங்கி ஓர்
வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருஓங்கும் உணர்வின் நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம் என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள் எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

---

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும் உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம் உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில் அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியந்தாதி

சுந்தரி எந்தைத்துணைவி என் பாசத்தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினுள் ; மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கம்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

தனம்தரும் கல்விதரும் ஒருநாளுந் தளர்வுஅறியா
மனம்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

விழிக்கே அருள் உண்டு அபிராமவல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டுஇனியே.

## குமரகுருபர சுவாமிகள்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே
யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்கும் தொழும்ப ருளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற் காடேந்தும்
இளவஞ்சிக் கொடியே வருகவே
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே! வருகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனாட்சி பிள்ளைத்தமிழ்

காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப்
    பழம்பாடல் கலைமாச் செல்வர்
தேடிவைத்த கடவுள் மணியே
        உயிர்
ஆலவாலத் துணர்வு நீர்பாய்ச்சி
    வளர்ப்பார்க்கு ஒளி பூத்தது
அருள்பழுத்த மலர் கற்பகமே எழுதாச்சொல்
    மழலை ததும்பு பசுங்குதலை
சோலைக்கிளியே உயிர்த்துணையாம் தோன்றுத்
    துணைக்கோர் துணையாகி
துவாத சாந்தப் பெருவெளியில்
    துரியங்கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த முழு முதலே
    முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடு மும்முலையாய்
    முத்தந் தருகவே.

## கற்பகவல்லியம்மைப் பதிகம்

இல்லாமை என்னுமொரு பொல்லாத பாவியாய்
    எந்நேரமும் இடருறுமல்
ஏற்காமல் ஏற்பவர்க்கு இல்லை என்று உரையாமல்
    இழிதொழில்கள் செய்திடாமல்
கல்லாத புல்லர் உறவு இல்லாமல் அடுபிணி
    கனுவிலும் எனைத் தொடாமல்
கற்ற பெரியோர்களொடு தர்க்கித்து எதிர்த்து நான்
    கடிந்த சொல் சொல்லிடாமல்
கொல்லாது கொல்லுமட மங்கையர்கள் இங்கிதக்
    கொள்ளையில் மயங்கிடாமல்
குறையொன்றும் வராமல் உனதடிமை செய்ய அருள்
    கூட்டுவாய் மதவேளைமுன்
வெல்லாமல் வென்றவன் இடத்தில் வளர் அமுதமே
    விரிபொழில் திருமயிலைவாழ்
விரை மலர்க் குழல்வல்லி மறை மலர்ப்பதவல்லி
    விமலி கற்பகவல்லியே.

—தாச்சி அருணாசல முதலியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

## தக்ஷிணாமூர்த்தி துதி

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா வியுடமதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை இலங்கு காதும்
தேங்கு பரமானந்த சின்மயா காயமாஞ்
சிந்தியருண் முத்திரையுமேற்
சிவாநுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான புத்தகமுமோர்
வேங்கையதளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவடிவமும்
மேலான தெய்வநீ யன்றி வேறில்லை யிது
மெய்யெடுத்த கனலும்
ஓங்க வடவாலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகியானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரமசிவமே.

—சிவஞானதேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடை அமர்ந்து நான்மறை ஆறங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்லாம்.

## அறுபத்துமூவர் துதி

தத்து மூதெயில் மூன்றுந் தழல்எழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர்அறு
பத்துமூவர் பதமலர் போற்றுவாம்.

## பைரவர் துதி

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்துஉமை யஞ்சக்கண்டு ஒண்திருமணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

—அப்பர்

## நந்தியெம்பெருமான் துதி

அங்கணன் கயிலை காக்கும் அகம்படி தொழிண்மைபூண்டு
நங்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாதனாகிப்
பங்கயம் துளப நாறும் வேத்திர படை பொருத்த
செங்கயம் பெருமான் நந்திசீரடிக் கமலம் போற்றி.

—காஞ்சிபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அர்த்தநாதீஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரசுவதி தோத்திரம்

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய் எழுதாமறையும்
விண்ணும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே.

—குமரகுருபரர்

## லக்ஷ்மி தோத்திரம்

செந்துவர் வாய்க்கரு ங்கண்ணிணை வெண்ணகைத் தேன்மொழியார்
வந்துவலஞ் செய்துமாநடம் ஆடமலிந்த செல்வக்
கந்தமலி பொழில்சூழ் கடல்நாகைக் காரோணம் என்றும்
சிந்தை செய்வாரைப் பிரியாது இருக்கும் திருமங்கையே.

## திருமால்

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார்படு துயரா யினவெல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயினசெய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேயர் துதி

அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றுஆறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துகாப்பான்.

—''கம்பநாட்டாழ்வார்''

## சண்டேசர் துதி

அண்டர் பிரானுந்தொண்டர் தமக்கதிபனாக்கி அனைத்தும்நாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்றங்கவர்—பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினார்.

—சேக்கிழார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறையாசிரியர்கள் திருப்பெயர்கள்

[1]திருஞானசம்பந்தர் [2]வாகீசர் [3]சுந்தரர்
[4]திருவாதவூரர் மற்றைத்
[5]திருமாளிகைத் தேவர் [6]சேந்தனார் [7]கருவூரர்
தென்னா [8]பூந்துருத்திநம்பி
வருஞான [9]கண்டராதித்தர் [10]வேணாட்டடிகள்
வாய்ந்த [11]திருவாலி யமுதர்
மருவு [12]புருடோத்தமர் [13]சேதிராயர் [14]மூலர்
மன்னு [15]திருவாலவாயார்
ஒரு [16]காரைக்காலம்மை [17]ஐயடிகள் [18]சேரமான்
ஒளிர் [19]கீரர் [20]கல்லாடர் தாம்
ஒண் [21]கபிலர் [22]பரணர் மெய்யுண [23]ரிளம்பெருமானோ
டோங்கும் [24]அதிராவடிகளார்
திருமேவு [25]பட்டினத்தடிகளொடு [26]நம்பியாண்
டார் நம்பி [27]சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்விகத் தன்மையோரே.

—ஆடூர் சு. கணபதியாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

## பாசுரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

— சம்பந்தர்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள்ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

—கச்சியப்பர்

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க: யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகளில் வரும்

| பண்களும் | அதற்கான இராகங்களும் |
|---|---|
| 1 நட்டபாடை | ... கம்பீரநாட்டை |
| 2 தக்கராகம் | ... காம்போதி |
| 3 காந்தாரம் | ... நவரோசு |
| 4 செவ்வழி | ... யதுகுலகாம் போதி |
| 5 அந்தாளிக்குறிஞ்சி | ... சாமா |
| 6 பழம் பஞ்சுரம் | ... சங்கராபரணம் |
| 7 மேகராகக்குறிஞ்சி | ... நீலாம்பரி |
| 8 கொல்லி கௌவாணம் | ... நவரோசு |
| 9 பழந்தக்கராகம் | ... சுத்தசாவேரி |
| 10 குறிஞ்சி | ... அரிகாம் போதி |
| 11 நட்டராகம் | ... பந்துவராளி |
| 12 வியாழக்குறிஞ்சி | ... சௌராஷ்டிரம் |
| 13 புறநீர்மை | ... பூபாளம் |
| 14 பஞ்சமம் | ... ஆஹிரி |
| 15 செந்துருத்தி | ... மத்யமாவதி |
| 16 தக்கேசி | ... காம்போதி |
| 17 கொல்லி | ... நவரோசு |
| 18 இந்தளம் | ... மாயாமாளவகௌளை |
| 19 காந்தாரபஞ்சமம் | ... கேதாரகௌளை |
| 20 கௌசிகம் | ... பைரவி |
| 21 பியந்தைக்காந்தாரம் | ... நவரோசு |
| 22 சீகாமரம் | ... மாயாமாளவகௌளை |
| 23 சாதாரி | ... பந்துவராளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிருதிருமுறைகள் பற்றிய குறிப்பான விளக்கங்கள்

### திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளிய 3 திருமுறைகள்

*முதலாந்திருமுறை*

*இரண்டாந்திருமுறை*

*மூன்றாந்திருமுறை*

*சம்பந்தர் பாடிய திருமுறைகளுக்கு*

**''திருக்கடைக்காப்பு''**

*எனப் பெயர் வழங்கி வருகிறது.*

*மூன்றுதிருமுறைகளிலும் மொத்த பதிகங்களும், பாடல்களும்*

*பதிகங்கள் : 384*

*பாடல்கள் : 4159*

### திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிச் செய்த 3 திருமுறைகள்

*நான்காந்திருமுறை*

*ஐந்தாந்திருமுறை*

*ஆறாந்திருமுறை*

*நாவுக்கரசர் பாடியருளிச்செய்த (அப்பர்) திருமுறைகளுக்கு*

**''தேவாரம்''**

*எனப்பெயர் வழ்ங்கி வருகிறது.*

*மூன்று திருமுறைகளிலும் மொத்த பதிகங்களும், பாடல்களும்.*

***பதிகங்கள் : 313***

***பாடல்கள் : ,3045***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளியது

## 7-ந் திருமுறை மட்டும்

சுந்தரர் பாடிய திருமுறைகளுக்கு

''திருப்பாட்டு''

எனப்பெயர் வழங்கி வருகிறது.

சுந்தரர் பாடிய 7-ந்திருமுறையில் வருகிற பதிகமும் பாடலும்

பதிகங்கள் : 100

பாடல்கள் : 1026

## 8-ந் திருமுறை

திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிச் செய்தவை.

திருவாசகப் பாடல்கள் : 656

சிற்றம்பலக்கோவையார் : 400

## 9-ந் திருமுறை

பாடிய ஆசிரியர்கள் ஒன்பது பேர்

1) திருமாளிகைத் தேவர்
2) சேந்தனார்
3) கருவூர்த்தேவர்
4) பூந்துருத்தி காடநம்பி
5) கண்டராதித்தர்
6) வேணாட்டடிகள்
7) திருவாலியமுதனார்
8) புருடோத்தமநம்பி
9) சேதிராயர்.

9-ந்திருமுறையில்

திருவிசைப்பா

பதிகம் : 29 பாடல்கள் : 303

திருப்பல்லாண்டு பாடல்கள் : 13

## 10-ந் திருமுறை

திருமூலதேவர் பாடியருளியது ''திருமந்திரம்''

மந்திரங்கள் : 9

பாடல்கள் : 3050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11-ந் திருமுறை

12 ஆசிரியர்கள் பாடியருளியது

1) திருவாலவாயுடையார் (சிவபெருமான்)
2) காரைக்கால் அம்மையார்
3) ஐயடிகள் காடவர்கோன்
4) சேரமான் பெருமாள் நாயனார்
5) நக்கீரதேவர்
6) கல்லாடதேவர்
7) கபிலதேவர்
8) பரணதேவர்
9) இளம்பெருமானடிகள்
10) அதிராவடிகள்
11) பட்டினத்தடிகள்
12) நம்பியாண்டார் நம்பிகள்

(40 பிரபந்தங்கள்)

## 12-ந் திருமுறை

பெரியபுராணம் எனவும்,
திருத்தொண்டர் புராணம் எனவும் பேசப்படுவது.

### தெய்வச்சேக்கிழார் சுவாமிகள் பாடியருளியது

| | | |
|---|---|---|
| காண்டம் | : | 2 |
| சருக்கம் | : | 13 |
| பாடல்கள் | : | 4253 |

## மொத்தக் குறிப்பு

பன்னிருத்திருமுறைகளிலும் 27 ஆசிரியப் பெருமக்கள் பாடியருளிய கூடுதல் பாடல்கள் : 18290.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைக் குறிப்புகள் 1

பகல் பண்கள் 10

| பண் | | | கர்நாடக இராகம் |
|---|---|---|---|
| 1 | புறநீர்மை | ... | பூபாளம் |
| 2 | காந்தாரம், பியந்தைக்காந்தாரம் | ... | நவரோசு |
| 3 | கௌசிகம் | ... | பைரவி |
| 4 | இந்தளம், திருக்குறுந்தொகை | ... | மாயாமாளவகௌளை |
| 5 | தக்கேசி | ... | காம்போதி |
| 6 | நட்டராகம் மற்றும் சாதாரி | ... | பந்துவராளி |
| 7 | நட்டபாடை | ... | கம்பீரநாட்டை |
| 8 | பழம்பஞ்சுரம் | ... | சங்கராபரணம் |
| 9 | காந்தாரப்பஞ்சமம் | ... | கேதாரகௌளை |
| 10 | பஞ்சமம் | ... | ஆகிரி |

## இசைக் குறிப்புகள் 2

இராப்பண்கள்

| பண் | | | இராகம் |
|---|---|---|---|
| 1 | தக்கராகம் | ... | காம்போதி |
| 2 | பழந்தக்கராகம் | ... | சுத்தசாவேரி |
| 3 | சீகாமரம் | ... | நாதநாமக்ரியா |
| 4 | கொல்லி, கொல்லிக்கௌவாணம் திருநேரிசை | ... | நவரோசு |
| 5 | வியாழக்குறிஞ்சி | ... | சௌராஷ்டிரம் |
| 6 | மேகராகக்குறிஞ்சி | ... | நீலாம்பரி |
| 7 | குறிஞ்சி | ... | அரிகாம்போதி |
| 8 | அந்தாளிக்குறிஞ்சி | ... | சாமா |

## இசைக் குறிப்புகள் 3

பொதுப்பண்

| பண் | | இராகம் |
|---|---|---|
| செவ்வழி | ... | யதுகுலகாம்போதி |
| செந்துருத்தி | ... | மத்யமாவதி |
| திருத்தாண்டகம் | ... | அரிகாம்போதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம்

தினசரி ஆலயங்களில் ஓதும் முறை

| | | | |
|---|---|---|---|
| 1 | 7 திருமுறைகளில் உள்ள ஒரு தேவாரப் பாடல் | : | 1 |
| 2 | மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகப் பாடல் | : | 1 |
| 3 | 9-ந் திருமுறையாகிய திருவிசைப் பாடல் | : | 1 |
| 4 | 9-ந்திருமுறையில் ஒருபகுதியான திருப்பல்லாண்டு | : | 1 |
| 5 | சேக்கிழார் அருளிச்செய்த பெரிய புராணப் பாடல் | : | 1 |
| | ஆக பாடல் | : | 5 |

ஸோடஸோ உபசார காலங்களில் நித்தியம் பூஜையில் சொல்வது பஞ்சபுராணம்.

## மரபுபடி

கும்பாபிஷேக யாகசாலையில் 12 திருமுறையில் இருந்து ஒவ்வொரு பாடலாக சொல்வதும் ஒரு வழக்கு.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் | முதல்திருமுறை | ஒருபாடல் |
| 2 | ஷ்டி | இரண்டாந்திருமுறை | ,, |
| 3 | ஷ்டி | மூன்றாந்திருமுறை | ,, |
| 4 | திருநாவுக்கரசர் | 4-ந்திருமுறை | ,, |
| 5 | ஷ்டி | 5-ந்திருமுறை | ,, |
| 6 | ஷ்டி | 6-ந்திருமுறை | ,, |
| 7 | சுந்தரர் | 7-ந்திருமுறை | ,, |
| 8 | மாணிக்கவாசகர் | 8-ந்திருமுறை திருவாசகம் திருக்கோவையார் | ,, |
| 9 | திருவிசைப்பா | 9-ந்திருமுறை | ,, |
| | திருப்பல்லாண்டு | 9-ந்திருமுறை | ,, |
| 10 | திருமந்திரம் | 10-ந்திருமுறை | ,, |
| 11 | 11-ந்திருமுறை | 12 ஆசிரியர்கள் பாடல் | ,, |
| 12 | பெரியபுராணம் | | ,, |

கூடுதல் 14 பாடல்கள் ஆகின்றன. இதன்பின்னர் திருப்புகழ் பிள்ளைத்தமிழ்

வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யூனைட்டெட் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்